KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ௵ ஜூன் ௴ 21௳ [No. 25

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 385

2. தமிழ்ப் பாடம்—இலக்கணம் 387

3. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (இயற்கைத்தருமம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, &
ஆஷாதேவி M. A. 389

4. வஞ்சினமொழிகள்
C. பழனிக் குமரன் 391

5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 7-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 393

6. கம்பராமாயணம் (கலன்காண் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 394

7. அட்டவணை 396

கலாநிலயம்

கல்சரை யடையும் வகை 2.

கடவுளின் திருவுளக் கருத்தே சிறப்புடன், இடமகலிவ் வுலகமெங்கெங்கும் எந்நாளும் நடைபெறவேண்டுமென்றநோக்கமுடன் நிலைத்திருக்கின்ற கல்சரென்னுமத் திப்பியத் தன்மையை, தத்தம் இயற்கை அம்சங்களை இயற்கைச்சக்திகளால் வளர்த்து எய்துவதல்லால் மாந்தர் தம்மனமொழிமெய்களாற் செயற்பாலது எதுவும் இல்லையென்னும் வாய்மைவழி ஒழுகுவோர், தாம் குறிக்கொண்ட முடிவினைப் பெறுதற்கியலும் என்றவோர் உறுதி உடையவராதல்வேண்டுமென்பதைமுன்னர் வற்புறுத்தினோம். ஒருபாலிருந்து அடிப்படையாகிய இவ்வுறுதியை விளைவிப்பதும், மறுபாலிருந்து முடிவாகிய கல்சர்நிலை எய்துவிப்பதற்கோர் அருங் கருவியாய்அமைந்து உதவுவதும், புத்தகங்கள் ஆகலால், கல்சர் அடையும் வகையினை ஆராயுங்கால் புத்தகங்களுக்குத் தலையிடங்கொடுக்கவேண்டியவர்களா யிருக்கின்றோம்.

புத்தகங்களின் வகைகள் எத்தனையோ இருக்கின்றன. ஆயினும் கல்சரின் சார்பாக நாம் கருதநிற்பன, சான்றோர் தம் தெருண்ட உணர்வினால் திரட்டித்தந்துள நூல்களேயாகும். மாண்புடைய மனங்களுடன் நம்மை உறவுசெய்விக்கும் அருமையால் பெரிய நூல்களை, மற்றையபுத்தகங்களினின்று பிரித்துணர்த்தும் பொருட்டு, இலக்கியங்களென் றழைப்பர். எம்மொழியிலும் உயரிய இலக்கியங்களும் உள, இழுதைகள் எழுதியபல காகிதக் குப்பைகளு ம்உள. முன்னவை, மேலோர் உறவினால் வரும் நலங்களெல்லாம் எய்துவிக்கும்; பின்னதோ சிற்றினச் சேர்க்கையின் இழிவனைத்தும் இழைத்துவைக்கும். நமது தெய்வசிந்தனை தருமசிந்தனை முதலிய அம்சங்கள் உயர்ந்தோங்க வேண்டுமென்னின், மனிதருக்கும் மிருகங்களுக்கும் பொதுவாகவுள்ள குணங்கள்சில ஒடுங்கவேண்டுமென்பது இன்றியமையாதென்பதை மறத்தல் ஆகாது. மெய்வருபோகமென்னும் படுகுழியில் விழுந்தழிந்து போகின்ற ஆன்மாக்கள் ஒன்றல பல. செல்வமுடைய வகுப்பினருள் எத்துணை ஆன்மவாழ்க்கை சிற்றின்பப் பெருக்கிலே முழுகித் தொலைகின்றதென்பதை நினைக்கவல்லோர் நெஞ்சங் கலங்கும். ஐம்புல நுகர்ச்சியின்பால் மக்களைக் கூட்டிக்கொடுக்குங் கொடுமையினாற் செல்வம் பெரும்பாலும் சபிக்கப்பெற்றதே. நுகரும் வகையற்ற ஏழைகள் முகத்திலும், சிற்றின்பம் சில வேண்டுமே தமக்கென்று அவாவிக்கிடக்கும் அவலச் செய்தியைக் காணலாம். சிற்றின்பம் என்ற சொல்லால் வேசியும் மதுவும் வேண்டி யுழல்வதையே குறிக்கின்றோம் என்று எண்ணவேண்டா. உணவென்றும் உடையென்றும் உறையும் வீடென்றும், ஊரும் வாகனமென்றும், ஏவலுக்கு ஆளென்றும், உத்தியோகப் பெருமையென்றும், இருப்பவர் இறுமாப்பதும், இல்லாதார் ஏங்குவதும், சிற்றின்பமென்னும் இனத்தைச் சேர்ந்தவைகளே. இதனான், உணவோடு உடை உறையுள் ஊர்தி முதலியவைகள்யாவும் சிற்றின்பமே என்றும், அவையனைத்தையும் விலக்கிவிடவே வேண்டுமென்றும் வாதிப்பதன்று எம் கருத்து. மிதமின்றி இன்னவைகளில் கவனத்தைச்செலுத்துவதுசிற்றின்பபோகமென்ற வசைக்குஇலக்காவதுஒருபுறமிருக்க, அவைகளைப் பெற்றிருக்கின்ற அளவிலேயே இன்பம் உளதென் றெண்ணி விவகரிப்பதும் சிற்றின்பவாழ்க்

கையேயென்று இங்குச் செப்பலுறுகின்றோம். உணவாதிய பொருள்களைத்தேடுவதும், அவ்வாறு தாம்தேடியபொருளையோ அல்லது பிறர்தேடிவைத்த பொருளையோ நுகர்வதும் ஆகி, உண்டுடுத்துப் பின் மறுவேளைச் சோற்றிற்குக் காத்திருப்பதல்லால் வேறு நோக்கம் இன்மையே தோன்றக்கிடக்கும் ஒருபுன்மைவாழ்க்கைதான்பெரிதும் பழிப்பிற்கிடமாயிருக்கின்றது. பரத்தையர்பால் புக்குழலும் காமுகனும், மதுவருந்தித் தள்ளாடும் மதியிலியும், பழக்கத்தின் கொடுமையால்இப்புல்லொழுக்கம்பூண்டாரேனும் தம்செய்கை தகாதென்பதை நன்கு அறிந்தவர் அவர். இடையிடையே தம்நெஞ்சும் தமரும் இடித்துரைக்க நைந்து வருந்துவார். நாணமும் அவர்களை நலியும். ஆதலின், இத்தகையவர்கள் நூற்றில் ஒருவரேனும் ஒருகால் அப்பாழும் பழக்கத்தினின்று உய்ந்து கரையேறினு மேறலாம். மற்று, உலகஇயலில் ஒருகுற்றமும் அற்றதென்று கருதப்படுகின்ற இச் செல்வநுகர்ச்சியில் சிந்தைவைத்த வாழ்க்கையைக் கடந்து உண்மையையுணர்ந்துயர்தலென்பது அரிதினுமரிது. 'ஊசியின் காதில்ஒட்டைநுழைவதனி னரிது செல்வவான் துறக்கநாடு சேர்வது' என்று கூறிய கிறிஸ்தவவேதத்தின் உட்கருத்து இதுவேயாகும். தாம் வழிதவறிச் செல்கின்றோரென்பது தெரிந்தவர் திரும்புவார்; நேர்வழி இதுவேயென்று நடப்பவர் திரும்பவேண்டும் என்று நினைப்பதெங்ஙனம்!

மன்பதைத்தொகுதி இக்காலம் இன்னதோர் நிலையில் இருக்கின்றது. செல்வத்தால் வரும் புலனுகர்ச்சி பெற்றிருப்பார் பற்பலர் அதனிலேயே ஆழ்ந்து கிடக்கின்றனர். ஒருசிலர், ஏழையர்பால் இரக்கங்கொண்டு ஒவ்வோரளவு அந்நுகர்ச்சி அவர்களும் அடைவதற்கு அரசியல் தனதாயம் முதலிய முறைகளின் மூலமாய் முயலலாகின்றனர். இன்னணம் அடையவும் அடைவிப்பதற்கும் அவாவுகின்ற இதனைச் 'சுகம்' என்ற சொல்லால்உலகம்குறிக்கும். ஆனால், ஆங்கிலப்புலவர் கார்லைல் என்பவரைப்போல், "மைந்த, சுகமோ, நீ! சுகமாய் நீஇருந்தாலென்ன! இல்லாமற்போனாலென்ன! அதனால் யாருக்கு என்ன! உண்டபின் நீ யாதுசெய்ய நினைத்துளாய்? நீ நடத்திவைக்க நினைத்திருக்கும் எக்கருமத்திற்கு, உணவு உடை முதலியன இல்லாமை இடையூறாயிருக்கின்றது, இயம்புவாய்" என்று எதிர்வருமெவரையும் கேட்பவர் நம்மிடை இலர். இடைவிடாமல் உறவுற ஒருவரைக் கேட்கும் இக்கேள்வியானது அவரைக் கல்சரின்பால் செலுத்துவதற்குப் பெரிதும் சாதனமாயிருக்கும். இக்கேள்வி இடையிடைத் தோன்றித் தகைவதில்லையாதலால், ஜனங்களில் செல்வமுடையவர்களும் அதனைத் தேடுவோருமாகிய இருதிறத்தோரும் ஆடுபோனவழி ஆடாகக் கடவநாள் கழித் தகல்கின்றனர். நிலைத்தலின்றித் தானே சென்றுவிடும் என்ற பொருளினால் மாத்திரமன்றி, "இதுகாறும் சென்றவழியே நாமும் செல்வோம், செல்வோம்" என்று யாவரையும் எண்ணும்படி செய்வதாலும் ஐசுவரியத்திற்குச் "செல்வம்" என்ற பேர் தக்கதாயது.

உணவனைய இன்றியமையாப் பொருள்கள் இன்மையே வறுமை என்ற பான்மைபோக்கி, இவையிருந்தும் அதனினும் உயர்ந்த வேறோர் நோக்கம் வாழ்க்கைக்கு இல்லாத நிலையே வறுமையாகும் என்றுணர்கின்ற உணர்வுதான் கல்சரின் கோட்டையும் கோயிலுமாகும். முன்னிங்குரைத்த அக்கேள்வியால் தூண்டப்பெறுவது இந்நோக்கம். மெய்யறிவுடையோர் நாவிலன்றி இக்கேள்வி எழுந்திடாது. இத்தகையவர் அத்திப்பூப்பூத்தால்போல்ஒருவரிருவர் நம்மிடையேநடமாடுகின்றனரோ, யாதோ, அறியோம். சிற்சிலருக்குமெய்யறிவுதான் ஒருசிறி திருப்பினும் சொல்வன்மை இன்மையால் அவர் கேள்வியும் உரையும் பொய்போலும் முடிகின்றன. ஆதலினால், மெய்யறிவோடு நாவன்மையும் உடைய மேன்மையோர்தாம் நம்மைக் கல்சரின்பால் உய்த்து உய்த்து உய்விக்கவல்லவர். இவர், "ஐய, பின் என்செய நினைந்தனை" என வினவுவதுமன்றி, "இது செயல்அன்றோ முறை" என விளம்புகின்றவருமாகின்றார்.

இவ்விதம், உண்டுடுத்துக்கண்டுகளித்து—இடையிடையே, வெஃகி வெகுண்டு புறங்கூறி அழுக்கறுத்து, மிகுதியில்தெவுட்டி வறுமையில் வருந்தி — காலங்கழிக்கின்ற வாழ்க்கையினின்று விலகிவரும் நோக்கமுடைய வித்தகர்தம் உறவு கிடைக்குமிடமெங்கேயென்று நாம் தேடியலையாமல், அம் மேலோர் தம் இயற்கைவண்மையால் தாமே நம்மைத்தேடிவருகின்றாரென்றால், சிற்றினத்தால் தூர்ந்த நம் மனைவாயிலில் வழிவிலக்கி அழைக்கவேண்டாவோ. நாவலர் நவின்றுள நல்லநூல்களே இவை. கண்ணபிரான் ஒருவரேயாயினும் கோவியர் இல்லந்தோறும் ஒரேகாலத்தில் கலந்திருந்ததேபோல், கம்பரும்ஷேக்ஸ்பியரும், காளிதாஸரும், காலம் இடம் என்ற இடையூறுகளின்றித் தம்மை அழைப்பவர் எவ்வெவரிடத்தும்விருந்தென வந்து தங்கக் காத்திருக்கின்றனர். விருந்தென வருகின்றாராயினும் இன்சுவை உணவுகளும் அவர்களே கொண்டுவருவதால், விருந்தளிப்பவரும்தாமேஆகின்றனர். மற்றை விருந்தினரைப்போல் நோக்கக் குழையார்; நாம் முகங்கொடாதிருப்பினும்செவ்விநோக்கிக் காத்திருப்பார்.

சிறந்த இலக்கியங்கள் மூலமாக மேலோர், நம்முடன் உரையாடித் தங்கள் அரும்பெரும் கருத்துக்களைக் கையுறையாகக் கொடுத்து நமது ஆன்மாவினுள் தங்கள் அன்பினைப்பொழிந்து கலக்கின்றனர். இத்தகையதோர் ஆன்மக்களவியல் நடப்பதால் இச்செய்தியை அகப்பொருள் என்னல் வேண்டும். இலக்கியங்கள் இருக்குமாறு அருள்புரிந்த கடவுளிற்குக் கைம்மாறுமுண்டோ. மனிதருக்குள் 'சமத்துவம்' ஏற்படவேண்டுமென்று இந்நாள் பலபடி முயல்வார் அனைவரும், இலக்கியங்கள் இவ்வகையில் எத்துணை உதவி புரியவல்லனவென்பது அறிவாராயின்வேறோர்கருவியும் முறையுங் கையாளக் கருதமாட்டார். நாம் எவ்வளவு ஏழையாயிருந்தாலென்ன; நம் தாழ்குடிலுள் நமதுஊர்ச் செல்வவந்தர் வருதற்கு இசையாது கழிந்தாலென்ன! தெய்வப்புலமையோர், மெய்யறி வித்தகர் செந்நாக் கவிஞர், எளிவந்து நம் நனைசுவர்க் கூரையிற்றங்கும்பாக்கியம்செய்திருப்போமாயின்முன்னேம்பின்னேம்பிறவிக்கும்அப்பெருமைஒன்றுமேபற்றாதோ! வள்ளுவர்வந்துதன்முப்பால்பொழிதரவாழ்வாரே. கம்பர், வேண்டினர் வேண்டுவன வளிக்கும் தம் கற்பகத்தருவினைக் கொணர்ந்து மனைதோறும் நட்டு

வளர்த்து அதன் நிழலில் நம்மை வீற்றிருக்க வைப்பார். அரங்கும் பாத்திரங்களுங்கொணர்ந்துமுன்றில் தோறும் தன்நாடகங்களை நடித்துக் காட்டுவார்போல் நம்மையே நாம் நன்கு நோக்கிக்கொள்ளுமாறு ஒவ்வொருவர் கையினும் ஒவ்வோர் விஞ்சைக்கண்ணாடி கொடுத்திடுவார் ஷேக்ஸ்ப்பியர். இன்னும் இவ்வாறு நாம் இருக்குமிடந்தேடி நமது உறுதிக்கே இயன்ற மதிப்பரிய மேன்மையை நமக்கு இணையாயிருந்து நல்கித் தோழமை பூண்டொழுகுவார் எத்தனையோ பலர் வரவிருக்க, கைப்பொருள் உடைமையேயன்றி வேறொருசிறப்பிலாச்சிலர் நம் புறங்கடை வாராதிருப்பதால் இலாபமேயன்றிஇழந்ததோ வொன்றுமில்லை.

தமிழ்ப்பாடம் 125.

[378-வது பக்கத் தொடர்ச்சி]

இலக்கணம்

வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களிலும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்களிலும், எழுவாய், விளி, வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், இடைச்சொல், உரிச்சொல், அடுக்கு ஆகிய அல்வழித் தொகாநிலைத்தொடர்களிலும், உயிரையேனும், குற்றியலுகரத்தையேனும், அல்லது, யகர ரகர ழகர மெய்களையேனும் ஈற்றினுடைய நிலைமொழியும் வல்லின மெய்யை முதலினுடைய வருமொழியும் புணரும்போது, அவ்வருமொழி முதலில் உள்ள வல்லின மெய் எவ்வெப்போது மிகும் என்றும் எவ்வெப்போது மிகாது என்றும் உரைத்தோம்.

இனி, வேற்றுமை அல்லாத வழியில், தொடர்கின்ற தொகைநிலைத் தொடர்கள் ஐந்து உள. அவை தாம், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை, என்பனவாம். இத்தொகைகளில் வருமொழிமுதல் வல்லினமெய் புணர்கின்ற விதங்களைப் பார்ப்போம்.

O. வினைத்தொகை.

செய்த தொழில், என வருங்கால் செய்த என்னும் நிலைமொழி பெயரெச்சம். அப்படியே, உடுக்கின்ற துணி, ஓடும் குதிரை, என்பவைகளில், உடுக்கின்ற, ஓடும் என்னும் நிலைமொழிகளும் பெயரெச்சங்களே. வினைச்சொற்கள் யாதேனும் தொழில் ஒன்று செய்வதைப்பற்றிச் சொல்லும். செய்தான், உடுக்கின்றான், ஓடுவான், என்பனபோல் அந்தத்தொழில்நடைபெற்றுமுடிவடைவதற்கு உரிய தன்மையைக் காட்டினால் அவ்வினைச்சொல் வினைமுற்றாகும். அல்லது, செய்து, செய்ய, செய்த, என்பனபோல் குறையாக நின்று, செய்து போனான், செய்த பையன் என்ன, முடிவதற்கு வேறொரு சொல் வேண்டியிருக்குமானால், அவ்வாறு குறையாகநிற்கின்றசொல், எச்சம் எனப்படும். எச்சமாய் நிற்கின்ற சொல், ஓடி வந்தான், படிக்கச் சொன்னான், என்பனபோல் முடிகின்றசொல் வினைச்சொல்லாயின், வினையெச்சம் என்றும்; ஓடிய நாய், படித்த புஸ்தகம், என்பனபோல் முடிகின்ற சொல் பெயர்ச்சொல்லாயின் பெயரெச்சம் என்றும் அழைக்கப்படும். (வால்யூம் 5, பக்கம் 43.)

மற்றஎல்லா வினைச்சொற்களையும்போல் பெயரெச்சமும் காலத்தைக் காட்டவேண்டும். எழுதிய கடிதம், எழுதுகின்ற கடிதம், எழுதும் கடிதம், என்பவைகளில் எழுது என்னும் பகுதியினடியாகப்பிறந்த பெயரெச்சங்கள், எழுதிய என்று நின்று இறந்த காலத்தையும், எழுதுகின்ற என்று நின்று நிகழ் காலத்தையும், எழுதும் என்று நின்று எதிர்காலத்தையும், முறையே காட்டிவரக் காணலாம். ஆயினும், சிலசமயம் இன்னகாலமென்பது தெரியாமல் மறைந்திருக்கும்படி பெயரெச்சங்கள் நிற்கவும் கூடும். செய்தொழில், உழுமாடு, ஓடு குதிரை, வருபுனல், என்பவைகளில் செய், உழு, ஓடு, வரு எனும் நிலைமொழிகள் பெயரெச்சங்களாயினும் காலமின்னதென்று காட்டாமல் நிற்கின்றன. செய்தொழில், என்பது சந்தர்ப்பத்திற் கேற்றவாறு செய்ததொழில் என்று இறந்த காலத்தையேனும், செய்கின்றதொழில் என்று நிகழ் காலத்தையேனும், செய்யும்தொழில் என்று எதிர் காலத்தையேனும் காட்டலாம். இவ்வாறு காலம் கரந்த பெயரெச்சம் நிலைமொழியாகத் தொடர்கின்ற தொடர் வினைத்தொகை எனப்படும். காலம்காட்டும் இடைநிலையும் விகுதியும் தொக்கு இருப்பதால் இது தொகைஎன்னலாகின்றது. (வால்யூம் 6, பக்கம் 370)

வினைத்தொகையில்வருமொழிமுதல்வல்லினமெய் ஒருபோதும் மிகாது:—

உழு + படை = உழுபடை
ஈட்டு + தனம் = ஈட்டுதனம்
எரி + தழல் = எரிதழல்
ஊது + குழல் = ஊதுகுழல்
பிடி + துணி = பிடிதுணி
காய் + சுடர் = காய்சுடர்
களிகூர் + காட்சி = களிகூர் காட்சி
வீழ் + புனல் = வீழ்புனல்
நிகழ் + காலம் = நிகழ்காலம்

குறிப்பு:—வினைத்தொகைகளில் நிலைமொழிகள்எல்லாம் வினைச்சொற் பகுதிகளாகவே இருக்கும். இப்பகுதிகள், விரிசுடர், உடுபுடவை, நடுகல், கொய் தளிர், என்பனபோல் இயல்பாயிருப்பினும், அல்லது வருபுனல் தருபணம் என்பனபோல் விகாரப்பட்டிருப்பினும் அத்தொடர்கள் வினைத்தொகைகளே.

P. பண்புத்தொகை.

பண்புத்தொகையின் இலக்கணம் முன் (6-வது வால்யூம், 388, 409-வது பக்கங்களில்) கூறப்பட்டிருக்கின்றது.

I பண்புத்தொகையில் வருமொழி முதல் வல்லின மெய் மிகுந்து புணரும்.

அடி + தளிர் = அடித்தளிர். அடியாகிய தளிர் என்று விரியுமகையால் இது பண்புத்தொகை.
கை + தாமரை = கைத்தாமரை
பலா + செடி = பலாச்செடி
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

உவகை + சுவை = உவகைச்சுவை
தமிழ் + சொல் = தமிழ்ச்சொல்.

II (1) ஒன்று, இரண்டு, நான்கு ஐந்து ஆறு ஏழு ஒன்பது எனும் எண்ணலளவைப் பண்புப்பெயர்கள் அப்படியே நின்றாலும் அல்லது ஒரு ஓர் இரு அறு எழு, என விகாரப்பட்டு நின்றாலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

ஒரு + குதிரை = ஒரு குதிரை
இரு + செவி = இரு செவி
நான்கு + திசை = நான்கு திசை
ஐந்து + பொறி = ஐந்து பொறி
ஆறு + சமயம் = ஆறு சமயம்
அறு + சமயம் = அறு சமயம்
ஏழு + கிணறுகள் = ஏழு கிணறுகள்
எழு + பிறப்பு = எழு பிறப்பு
ஒன்பது + துவாரம் = ஒன்பது துவாரம்

(2) எட்டு, பத்து, என்னும் வன்றொடர்க் குற்றிய லுகரத்தை ஈற்றிலுடைய எண்ணுப் பெயர்களுக்குப் பின்னும், மூன்று என்பது 'மு' என்று விகாரப்பட்டு நிற்பினும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

எட்டு + திக்கு = எட்டுத்திக்கு
பத்து + தலை = பத்துத்தலை
மு + பிழை = முப்பிழை

குறிப்பு:—விகாரப்படாமல் மூன்று என்றே நிற்கு மாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

மூன்று + கண் = மூன்றுகண்.

(3) முதுமை, சிறுமை, என்னும் பண்புப்பெயர் கள் முது சிறு என விகாரப்பட்டு நிலைமொழியாக நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

முது + பேய் = முதுபேய்
சிறு + குழந்தை = சிறு குழந்தை

குறிப்பு:—பொதுமை முழுமை புதுமையென்னும் பண்புப்பெயர்கள் பொது முழு புது என விகாரப் பட்டு நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

பொது + குணம் = பொதுக்குணம்.
முழு + பழம் = முழுப்பழம்.
புது + புனல் = புதுப்புனல்.

அரை, என்னும் அளவைப்பெயர்க்குப் பின் வரு மொழி முதல் வல்லினமெய் மிகும்.

அரை + காசு = அரைக்காசு
அரை + கும்பிடு = அரைக்கும்பிடு.

III நிலைமொழி வருமொழி இரண்டும் சம்ஸ்கிரு தச்சொற்களா யிருக்குமாயின் வருமொழிமுதல் வல் லினமெய் மிகாது.

பாத + பங்கஜம் = பாதபங்கஜம்
நாக + பாசம் = நாகபாசம்.

Q. உவமத் தொகை

உவமத் தொகையின் இலக்கணம் முன் (6-வது வால்யூம், 425-வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின் றது

I உவமத் தொகையில் வருமொழிமுதல் வல்லின மெய் மிகுந்தே புணரும்.

தாமரை + கை = தாமரைக் கை
கற்பக + கொடை = கற்பகக் கொடை
அமுத + சொல் = அமுதச் சொல்.

குறிப்பு:—(1) எனினும் உவமத் தொகையிலும், வருமொழி பெயர்ச்சொல்லா யிராமல் வினைச்சொல் லா யிருக்குமாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கோழி + கூவினன் = கோழி கூவினன்
கிளி + கூவினன் = கிளி கூவினன்
புலி + பாய்ந்தான் = புலி பாய்ந்தான்

இவை கோழிபோல் கூவினன் என்றும், கிளி போல் கூவினன் என்றும் புலிபோல் பாய்ந்தான் என்றும் விரியுமாகையால், உவமத்தொகைகளாகும்.

II நிலைமொழி வருமொழி இரண்டும் சமஸ்கிருத ச் சொற்களாயிருக்குமாயின் உவமத்தொகையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கமல + பாதம் = கமலபாதம்

R. உம்மைத் தொகை

உம்மைத் தொகையின் இலக்கணம், முன் (6-வது வால்யூம், 425 வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின் றது.

I உம்மைத் தொகையில் வருமொழிமுதல் வல் லினமெய் மிகாது.

சேர + சோழ + பாண்டியர் = சேரசோழபாண் டியர்
நெய் + பால் = நெய்பால்
மிளகு + திப்பிலி = மிளகுதிப்பிலி
தாய் + தந்தை = தாய்தந்தை
கத்தி + கேடயம் = கத்திகேடயம்
வெற்றிலை + பாக்கு = வெற்றிலைபாக்கு.

குறிப்பு:— (1) நிலைமொழி, இரண்டெழுத்துச் சொல்லாயிருந்து பின்னெழுத்து நெடிலாகவும் இருக்குமானால் உம்மைத்தொகையிலும் வருமொழி முதல் வல்லினமெய் மிகும்.

இரா + பகல் = இராப்பகல் (இரவும் பகலும்)
சுறா + கயல் = சுறாக்கயல் (சுறாவும் கயலும்)

(2) நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றில் உடையதாயின் உம்மைத்தொகையிலும் வரு மொழிமுதல் வல்லினமெய் மிகும்.

சுக்கு + திப்பிலி = சுக்குத்திப்பிலி (சுக்கும் திப்பி லியும்)

S. அன்மொழித் தொகை

அன்மொழித் தொகையின் இலக்கணம், முன் (வால்யூம் 6, பக்கங்கள் 447, 466, 483) கூறப்பட் டிருக்கின்றது. வேற்றுமை, பண்பு, வினை, உவமம், உம்மை, ஆகிய இத்தொகைகளில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே சில தொக்கு இருப்ப தோடு வருமொழி இறுதியிலும் சில தொக்கு இரு ந்து அத்தொடர் வேறோர் பொருள் தரும்படி நிற்கு மாயின் அது அன்மொழித்தொகை. இவ் வன்மொ ழித் தொகையே பொருளால் நிலைமொழிபோல் நின் று வருமொழிமுதல் வல்லினமெய்யோடு புணரும். அப்புணர்ச்சி இதுகாறும் சொல்லிவந்த விதிகளுக்கு அடங்கி நடக்குமாதலால் சிறப்பாக ஒன்றும் சொ ல்ல வேண்டுவதில்லை.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

இயற்கைத் தருமம்

[346-வது பக்கத் தொடர்ச்சி]

இயற்கைத் தருமம் ஓர் காலத்தில் பாரத நாட்டில் இருந்தது. இதற்கு வேண்டிய குறிப்பை உபநிடதத்திற்காணலாம். அங்கேபிரகாசிக்கின்றவராகிய பிரம்ஹா பரிபூரணமானவர், பிரிவினையற்றவர். நம்முடைய மனோபாவனையாகிய வலையிற் சிக்குண்டவரல்லர். "ஸத்யம் ஞான மநந்தம் பிரஹ்மம்."

அவரே சத்தியம்; அப்படி இல்லாவிட்டால் இவ்வுலக வாழ்வு சிறிதேனும் சத்தியமாக இருக்கமாட்டாது. அவரே ஞானம், பூவுலகில் காணப்படும் சகலமும் அவரின் ஞானம்; அவருடைய அறிவே சகலத்தையும் உண்டாக்கியது; அவர் மாத்திரமே சத்தியம், அனந்தமானவர். அனந்தமானசத்தியமும், ஞானமுமாயிருக்கின்றார்.

இவ் விசித்திரமான இம்மைவாழ்வினிடையே பிரஹ்மாவின் அனந்த சத்தியத்தையும் ஞானத்தையும் உபநிடதம் தெளிவாகக் காட்டியிருக்கின்றது. அவ்வுபநிடதம்விசேஷமாக வேறுஓர்லோகத்தை மனோபாவனையால் கற்பனைசெய்யவில்லை. விசேஷமான ஓர்கோவிலைவிஸ்தரிக்கவில்லை, விசேஷமானஓர்ஸ்தலத்தில்விசேஷமான ஓர் மூர்த்தியை ஸ்தாபனம் பண்ணவில்லை; பிரம்ஹாவையே பரிபூரணமாகத் தனக்குள்ளே கண்டறிந்து சகலவிதமான மனோபாவனைகளின் சஞ்சலங்களையும் அற்றுப்போகச் செய்தது. புனிதமும் இயற்கையுமான தருமத்தின் இத்தகைய விஸ்தாரமான சிந்தை வேறெங்குத்தான் உளது?

உபநிடதம் வெளிப்படுத்தும் இப் பிரம்ஹாவானது நமது எண்ணத்திற் கெட்டாததென்று மனந்தளர்ந்து ஆராய்ச்சியின்றி ஒப்புக்கொள்கைக்கொண்டு, இருஷிகளுடைய அழிவற்ற மொழிகளை நம்முடைய வாழ்க்கையில் சிறிதேனும் நினையாமல் வீணே தள்ளிவைக்காதிருக்கக் கடவோம்.

ஒரு கல் துண்டைப்போல ஆகாசத்தை நாம் கையால் பிடிக்கமுடியாதென்று சொல்லி ஆகாசத்தோடு நமக்கு ஓர்விதமான உறவும் இல்லையென்று நாம் சாதிப்பதில்லை. அதன் பொருட்டே ஆகாசத்தை நாம் அதிகமும்கொண்டாடுகின்றோம். ரூபத்தைச்செய்துகொள்ளக்கூடியவைகள் எவைகளோ அவைகளேநமக்குத்தடைகளைச் செய்தமைத்துவைக்கின்றன. தன்கைகளால் கட்டிய சிறிய சுற்றுச் சுவர்களே நெருங்கிய சம்பந்தத்திற்குத் தடைகளை உண்டுபண்ணுகின்றன. ஆனால் அந்தமற்ற ஆகாசத்தை அவ்வண்ணம் கடக்க வேண்டியதில்லை. வைகறையில் பிரகாசிக்கின்றதாகிய கதிரவனின் ஒளி ஒருபிடி பசும்பொன்னைப்போலச் சேகரித்து வைக்கக்கூடியது அன்று; இக்காரணத்தினாலேயே சூரிய ஒளி, பெற்றுக்கொள்வதற்குக் கஷ்டமான பொருள் என்று சொல்ல முடியாது. உண்மையாகவே பொன்னைச் சம்பாதித்துக்கொள்வது கடினமான காரியமல்லவா? ஆகாசம் நிறைந்த கதிரவன் ஒளியை யாராவது விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டுமா? சூரியனின் ஒளியைவிலைகொடுத்துவாங்க வேண்டுமென்ற எண்ணத்தை மனதில் சிந்திக்கவே இயலவில்லை-அதுவோ விலை மதிக்கக்கூடாதது!

அத்தகைபதே உபநிடதத்தில் காணப்படும் பிரம்ஹா. அவர் உள்ளும் புறம்பும் எங்கும் உள்ளவர். உள்ளுக்குள்ளானவரும்அவரே, அப்புறத்துக்கப்புறமானவரும்அவரே. அவரதுசத்தியத்தின்மூலமாகவே நாம்சத்தியமானவர்கள், அவரின் ஆனந்தத்தின் மூலமாகவே நாம் வாழ்க்கையுடையவர்கள்.

"கோ ஹ்யேவ அந்யாத க: பிராண்யாத்
யதேஷ ஆகாஷ ஆநந்தோ ந ஷ்யாத்."

ஆகாசத்தில் இவ் ஆனந்தம் இல்லாவிடில் யார்தான் அசையக்கூடும்;யார்தான் ஜீவனோடிருக்கக்கூடும். ஆகாசத்தை நிறைவித்து அப்பிரஹ்மா அனந்தமாக இருப்பதினாலேயே நாம் ஒவ்வொரு நிமிஷமும் சுவாசிக்கின்றோம், ஜீவிக்கின்றோம்.

"ஏதஸையவ ஆனந்தஸ்ய அந்யாதி
பூதாநி மாத்ராமுப ஜீவந்தி"

இவ் ஆனந்தத்தின் ஓர் சிறிய அணுவளவான ஆனந்தத்தையே மற்றப்பிராணிகள் யாவும் உபயோகப் படுத்திக்கொள்கின்றன.

"ஆனந் தேன ஜாதாநி ஜீவந்தி
ஆனந்தம் பிரயந்தி அபிஸம் விஷந்தி"

சர்வ வியாபகமான அவ் ஆனந்தத்தில் இருந்தே சகல பிராணிகளும் உற்பத்தியாகின்றன. சர்வவியாபகமான அவ் ஆனந்தத்தின் மூலமாகவே சகல பிராணிகளும் ஜீவிக்கின்றன. சர்வவியாபகமா யிருக்கின்ற அவ் ஆனந்தத்தினுள்ளேயே இவைகள் திரும்பவும் பிரவேசிக்கின்றன.

ஈசுவரனின் சம்பந்தமாகச்சொல்லப்பட்டிருக்கும் வாக்கியங்களில் இவ்வாக்கியங்களே எல்லாவற்றிலும் எளிதும் இயற்கையும் ஆனவைகளாம். பிரம்ஹாவைப்பற்றிய இவ்வகைச் சிந்தனையை அங்கீகரிப்பதற்கு நாம் எதனையும் மனோபாவனையால் கற்பனை செய்துகொள்ள வேண்டியதில்லை, விஸ்தரிக்க வேண்டியதில்லை, தூரமாகச் செல்லவேண்டியதில்லை, நெடுங்காலம் காத்திருக்க வேண்டியதுமில்லை. நமது இதயத்தில் உற்சாகம் உதித்தமாத்திரத்திலே, ஈசுவரனை அடைய வேண்டுமென்பதாகிய பேர் அவா உண்டான மாத்திரத்தில், நமது சுவாசத்தினிடையே அவரது ஆனந்தம் பிரவாகமாகப் பெருகிப் பிராணனில் அவரது ஆனந்தம்கம்பீரம் அடைகின்றது, புத்தியில்மழைபோல் சொரிகின்றது. பகலொளி நமக்குப் பயன்படுவதற்கு நாம் நம் கண்களைத் திறப்பதல்லாமல் வேறோர் முயற்சியும் செய்யவேண்டியதில்லை; அவ்வாறே பிரம்ஹாவின் ஆனந்தமும் நம் இருதயமலர்ச்சியை மாத்திரமே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

ஓர்முறை தனியே நான் படகில் வாசம் செய்து வந்தபோது ஒருநாட் சாயங்காலம் மெழுகுவர்த்தியைக்கொளுத்தி நடுச்சாமவரையிலும் படித்துக்கொண்டிருந்தேன். களைத்துப்போய்நான்விளக்கை அணைத்தவுடன் நாற்றிசையிலுமிருந்து பூரணநிலா வந்துபரவி என் அறையை நிரப்பிற்று. ஆகையால் ஏற்றிவைத்ததாகிய ஓர் சிறியவிளக்கானது ஆகாசத்தின்கண் பிரகாசித்திருந்த மிதமிஞ்சினஒளி இதுகாறும்என்னைக்கிட்டிச்சேராதபடிபாதையைத்துர்லபமாக்கி வைத்திருந்ததென்பததெரிந்தது. அளவிடக்கூடாதஇவ்வொளியின் உரிமையை நான்பெற்றுக்கொள்ளும்வண்ணம் அவ்விளக்கைப்"பூ" என்றூதி அணைக்கவேண்டியதேஅன்றி

வேறெவ்விதமாகவும் பிரயாசைப்படவேண்டியதாக இருக்கவில்லை. விளக்கை அணைப்பதால் பெற்ற சுதந்தரம் எத்தகையது! காற்றினல் ஆடி அசையும் விளக்கு வெளிச்சத்தைப்போன்ற ஓர் பொருளேயாவது, பெட்டகத்தில்பூட்டிவைக்கவேண்டியஓர் பொருளேயாவது நான்பெற்றுக் கொள்ளவில்லை; ஒளி, ஆனந்தம், சவுந்தரியம், சாந்தி ஆகிய இவைகளையே பெற்றுக்கொண்டேன். அணைத்து வைக்கப்பட்டவிளக்கின் ஒளியைப் பார்க்கினும் அநேகமடங்கு அதிகமான ஒளியைப் பெற்றுக்கொண்டேன்— ஒளிகளுக்கெல்லாம் இத்தகைய குணங்கள் இருந்தபோதினும், இரண்டையும் பெற்றுக்கொள்ளும் மார்க்கம் வித்தியாசமானதாகவே இருக்கின்றது.

பிரம்ஹாவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொன்னைப்பெற்றுக்கொள்வதற்குப்பிரயாசைப் படுவதுபோலப் பிரயாசப்படாமல் கதிரவனின் ஒளியைப் பெற்றுக்கொள்ளும்வண்ணம் பிரயாசைப்படுவதுபோலப் பிரயாசைப்பட வேண்டும். பொன்னைச்சம்பாதிப்பதற்குப் பிரயாசைப்படுவதால் பலவித விரோதங்களும் வித்தியாசங்களும் இடையூறுகளும் நேரிடும். சூரியனின் ஒளியைப் பெற்றுக்கொள்ளப் பிரயாசைப்படுவோமாகில் எல்லாம் எளிதாகவும் இயற்கையாகவும் தோன்றும். பிரம்ஹாவுடன் நிரந்தரமாக நமக்கிருக்கும் சம்பந்தத்தை நாம் அறிந்திருந்தாலென்ன அறிந்திராவிட்டாலென்ன, அச்சம்பந்தத்தின் ஈடேறனது சிந்தனையை விழிப்படையச்செய்வதே பிரம்ஹபக்தனுக் குரிய சாதனை.

இப் பாரதநாட்டின் மார்க்கம் ஏகத்தின் மார்க்கம். நமதுமூதாதைகள் சென்ற அந்தப் பிரசித்தமான புராதன இயற்கையான இராசபாதையை விட்டு விலகாமலிருப்போமாயின் ஏதோ, ஒருவிதமாக நாம் தப்பித்துக்கொள்வோம். உலகத்தின்கண் மிகவும் பயங்கரமான கெட்ட காலம் இப்பொழுது தோன்றியிருக்கிறது. நாற்றிசையிலும் யுத்தத்தின் எக்காளம் தொனிக்கின்றது. வர்த்தகத்தின்பெரியதேரானதுபலவீனரைப்புழுதியில் அழுத்திச் சக்கரத்தினல் நொருக்கிக்கடகடத்த சத்தத்துடன் செல்லுகின்றது. தன்னயத்தின் கொடிய ஆவி புயல்போல் கர்ச்சித்து நாற்றிசையினுமிருந்து புரண்டடிக்கின்றது. ஏ, விதாத்தா! உனது சிங்காசனம் இன்று வெறுமையாக விருக்கின்றதென்று உலகத்து ஜனங்கள் எண்ணுகின்றார்கள். சம்ஸ்காரத்தின் நடைமுதல் பழக்கங்களில்லொன்றைப்போல் தருமத்தையுங்கருதி, சிந்தனை இல்லாதமனதிலிருந்து, வெளியான ஒரு சடங்கைப்போலவே தருமத்தைத் திரித்துவிட்டனர். சாந்தம், சிவம், அத்துவைதம், நீயே. இச்சுழிகாற்றில் நாம் அகப்பட மாட்டோம்; பழுத்துச் சொரிந்து காய்ந்த சருகைப்போல நாம்இச்சுழல் காற்றில்பறந்தடிபடமாட்டோம். உலகம்முழுவதினும் பரவிஇருக்கும் பயங்கரமான புயலின் தாண்டவ நிர்த்தத்தின் மத்தியிலேயே ஒரே சிந்தையுடன் ஒன்றிலேயே மனதைச் செலுத்தி இவ்விபுல விசுவாசத்தைப் பலத்துடன் பிடித்திருக்கக்கடவோம்.

"அதர்மேன ஏததே தாவத்
ததோ பத்ராணி பஷ்யதி,
தத: ஸபத்நான் ஜயதி
ஸமூலஸ்து விநஷ்யதி"

அதருமத்தின் மூலமாகச் சித்தி அடைந்தாற்போல் தோன்றவும் கூடும்; சத்துருக்களைத் தோற்கடித்தாற்போலத்தோன்றவும் கூடும். ஆயினும் இறுதியில் அடியோடு சர்வநாசமே தோன்றும்.

நானாவித துக்கம் இடையூறுகள் மிகப்பெரிய தண்டனைகள் ஆகியஇவைகளின்மத்தியில் ஏதோஒருநாள் இக்கெட்டகாலம் முடிவடையும். அப்போது, மானவசமுதாயம் இம்மொழிகளை இயம்பட்டும். அதிகாரத்தைப் பூசைசெய்வதும், திறமையின் மயக்கமும், எற்றிசையிலும் தன்னயத்தின் கடூரமான பிரயாசங்களும், திரண்டு கட்டிபட்ட அறியாமையின்இருளும், சேனைகளைப்போல் ஒழுங்குபட்ட தன்னைத் தானே மேன்மை படுத்திக்கொள்ளவேண்டுமென்ற கொடியதாகமும் ஆகிய இவைகள், வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் கர்ச்சித்தெழுந்த அக்காலத்தில் இப்பாரதநாடு தன் சுய தருமத்தை இழந்துவிடவில்லை, நித்தியமான சத்தியத்தின்மீது மாத்திரமே பலமான நம்பிக்கை வைத்திருந்தது. சகல விரோதங்களுக்கும் மேலாக ஏகமாகிய பிரம்ஹாவின் கொடியைக் கரங்களால் முழுப்பலத்துடனும் நாட்டிப் பிடித்திருந்தது. இன்னும் சகல விதமான கொந்தளிப்புள்ள கர்ச்சிதத்தின் மத்தியில் பயம் இல்லை என்ற இம்மந்திரத்தை உச்சரித்தது:—

"ஆநந்தம் ப்ரமஹனோ வித்வான்
நபிபேதி குதஷ்சன."

பிரஹ்மத்தின் ஆனந்தத்தை அனுபவித்தவன் ஒன்றிற்கும் பயப்படமாட்டான். இவ்வண்ணம் சம்பவிக்கக் கூடுமேயாகில், பாரத நாட்டில் இருஷிகளின் ஜன்மம், உபநிடதத்தின் படிப்பனை, கீதையின் உபதேசம், பலநூற்றாண்டுகளாக அடைந்த நானாவித துக்கங்கள், அவமானங்கள், இவைகள்யாவற்றின்பலனையும் அடைவோம். இவைகளைப் பொறுமையின் மூலமாகவும், தருமத்தின் மூலமாகவும், பிரம்ஹாவின் மூலவுமாகவுமே அன்றி இறுமாப்புடைய பெருமையையும் அகங்காரசக்தியையும் போன்ற குணங்களினல் அடைந்துகொள்ளவே மாட்டோம்.

ஓம், சாந்தி, சாந்தி, சாந்தி.

முற்றிற்று.

கலாநிலயம் முன்னைய வால்யூம்கள்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் வேண்டுவோர் உடனே பெற்றுக் கொள்வது நலம்.

வால்யூம் ஒவ்வொன்றின் விலை:—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0 ஆப் லெதர் கில்ட் பைண்ட் செய்தது. ரூ 9-0-0. தபால் அல்லது ரயில் கட்டணம் வேறு.

வஞ்சின மொழிகள்

வஞ்சின மென்பது, உயிரும் செல்வமும் போல்வன நிலையும் பொருளென நினையாது வஞ்சினம்செய்வது என நவில்வர்நச்சினார்க்கினியர். பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டில் செங்கோ லோச்சிய அரசர் பெருமக்கள் அறைந்த சில வஞ்சினமொழிகளை உற்று நோக்கினால், அன்னவர்களது, அறிவு ஆற்றல் பெருமை ஒழுகலாறு தனக்கென வாழாமை முதலியவைகளைக்காணலாம். முடியுடைவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், வரையாது வழங்கும் வள்ளியோர், செய்திருக்கின்றசெயற்கருஞ் செய்கைகளைச் செந்தமிழ்ப்பெரும் புலவர்கள் பாராட்டியுள்ளார்களேனும், அரசர் பெருமக்கள் தாங்களாகவே, கூறிவைத்தவை பெருமாண்புடையவன்றோ? அரசர் பெருமக்களது புகழ், அரும் பெரும்புலவர்களின் அறிவுக்குமே எட்டாமல் விஞ்சித்திகழ்கின்றது. கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியை 'ஐயூர் மூலங்கிழார்' என்னும் பெரும்புலவர் 'நின்னைப்பாடுவாரது அறிவி னெல்லையைக் கடந்த புகழமைந்த தலைவ' எனப் பாராட்டுகின்றார். வீர உணர்ச்சிதோன்றுமேல், உள்ளத்துள்ள எண்ணமெல்லாம்திரண்டெழுங்கால்தங்களை அறியாமலே உயரியஒழுக்கங்களை கூறிவிடுவது மக்களுக்கு இயற்கையேயாகும். அம்மொழிகளைக்கொண்டே அன்னவர்தம் வாழ்க்கைநிலையை நன்குஅறியலாம். நிற்க, மாற்றார்கள் ஊரை முற்றுகையிட்டுப் போர்முரசுமுழக்கியகாலை, முற்றுகையிடப்பட்டவர், ஐம்பெருங்குழு எண்பேராயம் அறிவான்மிக்க ஆன்றோர், முதலியவர்கள் கூடியுள்ள பேரவையில் வஞ்சினங்கூறிப் போருக்கு எழுவார்கள். இம்மொழிகள், அழகுபெறத்திகழ்ந்து நமது அறிவைக் கொள்ளைகொள்ளும். புறப்பாட்டில் வந்துள செய்யுள்களை முதற்கண் நோக்குவாம்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் அறைந்த வஞ்சினம் அருமையானது:—

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
யாரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்க ணிவளினும் பிரிக
வறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப் படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

[சிங்கம் போலச் சினந்து மீளாத மேற்கோள் பொருந்திய உள்ளத்தினையும் மிகைத்துச்செல்லும் படையையுமுடைய வேந்தர், தம்மில் ஒப்பக்கூடிவந்து என்னோடு பொருவேமென்று சொல்வர். அவ்வேந்தரைப் பொறுத்தற்கு அரியபோரின்கண்ணே அலறப்பொருது தேருடனே அவருடைந்தோடும் புறக்கொடையை நான்கண்டிலேனாயின், எனக்குச்சிறந்த பெரியவாய் முகத்தோடு பொருந்தினமையுண்ட கண்ணினையுடைய இவளினும்நீங்குவேனாக; அறமானது நிலைகலங்காத அன்பினை யுடைய அவைக்களத்து, அறத்தின் திறப்பாடில்லாத ஒருவனை வைத்து முறை கலங்கிக் கொடுங்கோல் செய்தேனாகுக; மிக்கபுகழையுடைய வையையாற்றாற் சூழப்பட்ட செல்வம்பொருந்திய ஊர்களிற் பொய்யாத புதுவருவாயை யுடைய மையல் எனுமூர்க்குத் தலைவனாகிய மாவனும், நிலைபெற்ற எயில் எனும் ஊரையுடைய ஆந்தையும், புகழமைந்த அந்துவஞ்சாத்தனும், ஆதனழிசியும், வெய்ய சினத்தையுடைய இயக்கனுமென இவருட்படப் பிறரும் எனது கண்போலும் நண்பினையுடைய நட்டாரோடுகூடிய, இனிய செருக்கையுடைய மகிழ் நகையைத் தப்பியவனாகிப் பலவுயிரையும்பாதுகாக்கும் அரசர்குலத்திற்சிறந்த பாண்டி நாடு காக்கும் காவலினீங்கிப் பிறருடைய வன்புலங்களை காக்கும் காவற்கண்ணே இக்குடிப்பிறப்பி னீங்கி யான் பிறப்பேனாக.]

ஆண்டில் இளையோனாயினும், அறிவினும் ஆற்றலினும் மூத்தோனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறுவான்.

நகுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தா
ணெடுநல் யானையுந் தேருமாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
லென்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
விரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

[நம்மாற் சிரிக்கத் தக்கார் இவன் ஆளுநாட்டை மிகுத்துச் சொல்லுவரெனவும் இவன்றான் இளைய னெனவும் யான் வெறுப்பச் சொல்லி, ஒலிக்கும் மணி இருமருங்கும் ஒன்றோடொன்று மாறியிசைக்கும் பரந்த அடியினையும் பெரிய காலினையு முடைய உயர்ந்த நல்ல யானையினையும் தேரையும் குதிரையையும் படைக்கலத்தொழிலமர்ந்தவீரரையும் உடையேம் யாமென்று எனது மிக்கவலிக்கு அஞ்சாதே மாறுபடும் சினம்பெருகிப் புல்லிய வார்த்தைகளைக் கூறிய சினம்பொருந்திய அரசரைப் பொறுத்தற்கு அரிய போரின்கண்ணே சிதறப்பொருது முரசத்தோடுகூட அவரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்தியஎனதுகுடை நிழற்கண் வாழ்வார், தாங்கள் சென்றடைவதற்குநிழற்காணாதே கொடியன் எம்முடைய வேந்தனென்று கருதிக் கண்ணீரைப் பரப்பிக் குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோலையுடையேனாகுக! (அதுவும் அன்றி) உயர்ந்ததலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய 'மாங்குடிமருதன் முதல்வனாக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழும் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக எனது நிலவெல்லையை; என்னால்புரக்கப்படும் கேளிர் துயரம்மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யானுற]

சோழன் நலங்கிள்ளி கூறிய வஞ்சினம் யாவரும் தம் கருத்தினுள்வைத்துக் கொண்டாடற்குரியதாம்.

மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
யீயென விரக்கு வராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானை காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

[மெல்லவந்து எனது நல்ல அடியை யடைந்து எமக்கு ஈயவேண்டுமென்று தாழ்ந்திருப்பாராயின், அவர்க்குச் சீர்மையை யுடைய முரசுபொருந்திய பழையதாய் வருகின்ற உரிமையையுடைய எமது அரசாட்சி கொடுத்தலோ எளியது; இனிய உயிரேயாயினும் கொடுப்பேன்! இந்நிலத்தின்கண் அமைச்சர் படைத்தலைவர் முதலாகிய வலியையுடையோரது வலியைப் பாதுகாவாது என்னுள்ளத்தை யிகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க்கும் விளங்கத் துயில்கின்ற புலியை இடறின குருடன்போலப் பிழைத்துப் போதலோ அரிது; மூங்கிலைத் தின்னும் வலியையுடைய யானையினது காலின்கண் ணகப்பட்ட வலியதிணியமூங்கிலது நீண்ட முளையை யொப்ப மேற்சென்று அவ்விடத்து வருந்தும்படி பொருதிலேனாயின் கூடிய தீதில்லாதநெஞ்சத்தாற் காதல்கொள்ளாத பலவகைப்பட்ட கரிய கூந்தலையுடைய பொதுப்பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடை என் மாலை துவள்வதாக.]

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் அறைந்த மொழிகளில், அன்பிற்சிறந்த ஆருயிர்த்தலைவியைப் பிரிவதனருமையும், அன்பும் அறமும் ஒருங்கே தங்கித்திகழும் அவைக்களத்தின் சிறப்பும், நட்பின் மாண்பும், செங்கோலின் செம்மையும், நன்கு தெரிகின்றன.

நெடுஞ்செழியன் விளம்பிய அம்மொழிகளில், தன்கீழ் வாழும் குடிமக்களை, அன்போடும் அருளோடும் ஆட்சிபுரியும் தன்மையையும், செந்தமிழ்ப் பெரும் புலவர்கள் தன்னைப் பாடாது நீங்குக வென்பதினால், புலவர்மாட்டுள்ள அன்பும், வரையாது வழங்கும்வள்ளற்றன்மையும் விளங்குகின்றன.

சோழன்கிள்ளி 'பகைவர் எனது அடியை அடைந்து எமக்கு ஈ யென்று தாழ்ந்திருப்பாராயின், எனது அரசாட்சியைக் கொடுத்தல் எளிது, இனிய உயிரேயாயினும் கொடுப்பேன்' என்று கூறுங்கால்தன் அருளையும், அஞ்சாத ஆற்றலையும், பொதுப்பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியால் வரும் தாழ்மையையும், 'கையிலங்கு பொற்கிண்ண'மெனக் காட்டுகின்றான். இம்மூன்று பாட்டுக்களாலும் முடியுடை வேந்தர்தம் ஒழுக்கம்,அன்பு, அருள், அறிவு, ஆற்றல், வண்மை, திண்மை, செங்கோலின்மாண்பு முதலியன இனிது விளங்கும்.

சீவகசிந்தாமணி ஆசிரியர், சீவகன் வஞ்சினமொழியாக, 'இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற புல்லாள னாகக்கடவேன்'', என்பதினால், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வழக்கம், அவர் காலத்தில், குன்றிவிட்டதென்பது தெரிகின்றது.

தலைவனும் தலைவியும் கூடியிருந்து வாழ்க்கை நடத்துதல், 'விருந்தோம்பல்' என்னும் சீரிய கொள்கைக்கேயாமெனப் பண்டைக் காலத்துத் தண்டமிழ்ப் புலவர்கள் அறுதியிட்டுரைக்கின்றார்கள். புலனழுக்கற்ற அந்தணராகிய ஆசிரியர் கபிலர், குறிஞ்சிப்பாட்டில்,

குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிறல்
உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றி,

என அழகாகக் கூறுகின்றார். "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணகி கூறுவதாக இளங்கோவடிகள் கூறுவதும் உற்று நோக்கற்பாலது.

அறிவான் மிக்க ஆன்றோர்களால்,புகழப்பட்ட இச்சீரிய அறம். திருத்தக்க தேவர் காலத்தில், இல்லாளை அஞ்சி விருந்தின் முகம்கொல்வது தலைவனுக்கு மிகப் பெரும்பழியென்பது தெரிகிறது. ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கூடியிருந்து செய்யும் அறமன்றோஇல்லறம்! மனைவிக்குக் கணவன் அஞ்சுவானானால், ஒத்த அன்பிற்குஇடமெங்கே? தேவர்காலத்துச்செந்தமிழ்த் திருநாட்டின் ஒழுக்கம்போலும் அது. கவியரசராகிய கம்பர், தேவரது கூற்றிற்கு அமைதிகாட்டுவார்போல்,

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

என்றுகூறுகின்றார். கோசலநாட்டுப் பெண்மணிகள், கல்வியும், செல்வமும், ஒருங்கே பெற்றிருப்பதால், விருந்தோம்பலும் ஈகையும் சிறப்புற்றோங்கியது. சங்ககாலத்தில், விருந்தோம்பல், தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள கடமையாயினும், சிறப்பாகத் தலைவிக்கே உரிய கடமையாயிருந்தது. இது கண்ணகி கூற்றாகக் கூறிய இளங்கோவடிகள் மொழியாலும் விளங்கும். கம்பர் கூறியவண்ணம் பெண்மணிகளுக்குக் கல்வியும் செல்வமும் பூத்தலால், விருந்தும் ஈதலும் ஓங்கின. தேவர்பாட்டிற்கு அமைதியன்றோ இது.நமது அருந்தமிழ்ப் பெரியாரும், கலைவல்லாருமான திரு சேஷாசலமவர்கள், மனைவி விருந்திடல் ஈகையாதி நற்குணங்களின் நயங்களைக் கல்லாதவளாயின்,ஆடவர்செயலற்றவ ராகின்றனர் என்று கூறுவதும், உய்த்துணரற்பாலது.

வில்லிபுத்தூராழ்வார், அருச்சுனன்கூற்றாகக் கூறிய வஞ்சினமொழியைப் பார்ப்போம்.

" இன்றபிமன் வாளமரி லின்னுயி ரிழக்கக்
கொன்றவனை நாளையுயிர் கோறல் புரியேனேல்
மன்றிலொரு சார்புற வழக்கற வுரைக்கும்
புன்றொழிலர் வீழ்நரகு புக்குழலு வேனே"
" தாதையு டனேமொழி தகாதன பிதற்றும்
பேதைமக னெய்துநெறி பெற்றுடைய னாவேன்"
" தாய்பசி கண்டுநனி தன்பசி தணிக்கு
நாயனைய புல்லருறு நரகிலுறு வேனே"

" தஞ்சென வடைந்தவர் தமக்கிடர் நினைக்கு
நஞ்சனைய பாதகர் நடக்குநெறி சேர்வேன் "
" மனைவியுயிர் வீயகன் மகன்மனைவி கையாற்
றினையளவு மோர்பொழுது சீவித்தவ னுவேன் "

புறப்பாட்டில் போந்துள்ளமொழிகளுக்கும் இதற்கும் வேறுபாடுகள்பலவுண்டு. முன்னையதிற்சிறந்த நீதிகளும், உயர்ந்த ஒழுக்கமுறைகளும், வீரச்சுவையும், வள்ளற்றன்மையும் ஒழுங்கே திகழ்கின்றன. பாரதத்தில்வரும் மொழிகள், அரசர்கள் கூறத்தகுந்தனவாயில்லை. இழிசனர் வழக்குக்கள்மலிந்துகிடக்கின்றன. 'ஈன்றாள் பசிகாண்பானாயினுஞ் செய்யற்க சான்றோர் பழிக்கும்வினை', என்றபொய்யில்புலவர்பொன்மொழியினுக்கும், 'தாயர் பசிகண்டுநனி தன்பசி தணிக்கும்' என்ற ஆழ்வார் மொழிக்கும் உள்ள வேறுபாடு எத்துணை? 'மனைவியுயிர் வீய' என்ற அடிகளுக்குப் பொருள் யாதோ? காதல் மனைவி இறப்பக் கணவன்,மகன் மனைவி கையால் சோறுண்டு வாழ்தல், இழுக்கென இயம்புகின்றார். கணவன் செய்யவேண்டிய கடமை தான்யாது? தற்கொலை புரிந்துகொள்வதா, பிரிதொரு மணம்செய்துகொள்வதா, துறவினைமேற்கொள்வதா? துறவுகொள்வதற்கு வேண்டிய மனப்பான்மை அமைந்திருக்க வேண்டுமன்றோ? கபிலர் கோப்பெருஞ்சோழன் இருவரும் வடக்கிருந்தார்களன்றோ? அதுவேபோல், மனைவியிறந்தபின் கணவனும், வடக்கிருத்தல் வேண்டுமென்பது ஆழ்வார் திருவுள்ளம்போலும்.

ஓர் புலவன்தான் வாழ்ந்தகாலத்துள்ள மக்களின் வழக்க ஒழுக்க நிலைகளைக் காவியங்களில்ஆண்டாண்டு வைத்துப் பாடிவிடுகின்றான். இது இயற்கைநெறியாகும். மேலைநாட்டுக் கலைவாணர், எமர்ஸன் என்னும் பெரியார் 'புலமைப் பேரின்பம் பெறும் உண்மை' என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுவர்.

"புலவன் தனது விரிவுற்ற உணர்ச்சியைத் தன்காலத்து மக்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு, தன்காலத்திலும் தனது மக்கட் பொதுவிலும் வழங்கும் குறியீடுகளைக் கையாளுதல் வேண்டும். எனவே புலமையில் புதியது என்பது எப்போதும் பழமையினின்றுமே உண்டாக்கப்படுகிறது. காலமாகிய பெரும்புலவன், ஒரு வேலைப்பாட்டின்கண் அழிக்கமுடியாத தன் அப்போதிய முத்திரையைப் பதிக்கிறான்; பதித்து, உளக்கண்ணிற்குச் சொல்வதற்கரிய ஓர் இன்பத்தைக் கொடுத்தருளுகின்றான். ஒரு புலவனது காலத்துள்ள ஆன்மநிலை, அவனை அதன் வயப்படுத்தி, அவனது வேலைப்பாட்டின்கண் விளங்குமாகில், அவ்வேலைப்பாடு ஒரு முதிர்ந்த மேம்பாட்டினை மேற்கொண்டு, பிற்காலத்தவர்க்கு அறிவிறந்ததையும் ஊழ்நிலையையும் கடவுட் டன்மையையும் அறிவிக்கும். ஊழ்நிலையாகிய இந்தப் பகுதியைத் தன்னுடைய வேலையினின்றும் நீக்குதல் எவனுக்கும் கூடாதது ஆகும். தனது காலத்தினிற்கும் நாட்டினிற்கும் முழுவதும் புறம்பாக நிற்றலாவது, அல்லது, தனது நாளின் கல்விமுறையோ, சமயமோ, அரசியலோ, வழக்கவகைகளோ, அல்லது, புலமைகளோ, ஆகிய இவை எவ்வளவும் கலக்காத புத்தம் புதிய ஏற்பாடு ஒன்றனை நிருமித்தலாவது எவனுக்கும் முடியாத ஓர் கருமமாகும்.

(பருந்தும் நிழலும்.)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து. 7-ம் தசகம்.

[383-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

மல்குநீர் கண்ணொடுமையலுற்றமனத்தினளா
யல்லுநன்பகலுநெடுமாலென்றழைத்தினிப்போய்ச்
செல்வமல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
யொல்கியொல்கிநடந்தெங்ஙனேபுகுங்கொலொசிந்தே.

அவதாரிகை:—இப்பாசுரம்முதல் தாய் தன்பெண்ணின் துர்த்தசையைப் பற்றி ஒன்றொன்றாக எண்ணமிட்டுக் குறிக்கிறாள்.

பதக் குறிப்புக்கள்:–நெடுமால்-தன்னை யாச்ரயிக்கிறவர்களைத்திர்க்ககாலம் ஆசையோடு ஆதரிக்கின்றவன். ஒல்குதல் - அசைதல். ஒசிந்து - துவண்டு.

பொழிப்புரை:—எம்பெருமானைக் கண்டு அருமந்தகாலமெல்லாம் அவனோடு கலந்து பரிமாறப்பெருமையாலே கண்ணீர் மல்கி, நெடுமால்நெடுமா லென்றழைத்து, இனி, என்பெண் அவனினின்றும் பிரிந்திருந்த வியஸநத்தாலும் வாலிபப்பருவத்தால்ஆற்றியிருக்கக் கூடாமையாலும் நிரம்பத் துக்கப்பட்டுத் தளர்நடை மெலிந்து துவண்டு செல்வ மல்கிய திருக்கோளூருக்கு எப்படிப்போய்ப் புகுவாளோ? அதை நான் காணப் பெற்றிலேன்.

குறிப்பு:—திருக்கோளூருக்குச் சென்ற யாத்திரை நிறைவேறியிருக்குமோ என்றுதாய்சங்கைப்படுகிறாள்.

8-ம் பாசுரம்

ஒசிந்தநுண்ணிடைமேற்கையை
வைத்துநொந்துநொந்து
கசிந்தநெஞ்சினளாய்க்கண்ணநீர்
துளும்பச்செல்லுங்கொல்
ஒசிந்தவொண்மலராள்கொழுநன்
றிருக்கோளூர்க்கே
கசிந்தநெஞ்சினளாயெம்மை
நீத்தவெங்காரிகையே.

அவதாரிகை:—சென்ற பாசுரத்தில், தன் பெண்மையலுற்றுஇருப்பதால்திருக்கோளூரை யெப்படிச் சேருவாள்என்றதாய்,இப்பாசுரத்தில்,காளுக்குநாள் பகவானைப் பிரிந்த சிந்தையினால் முன்னமே மனந்தளர்ந்தவள், நுண்ணிய இடையினது துர்ப்பலத்தால் நடக்கவே தள்ளாதவள்,ஆறுதல்கூறவும்தளரும்போது கைகொடுத்து உதவிபுரியவும்ஒருதுணையில்லாமல் சென்றாளே. க்ஷேத்திரம் தூரமான வழியாயிற்றே- ஆகையால் நடந்துசெல்லப் பெண்ணுக்கு அஸாத்தியமாகுமென்று பரிதபிக்கின்றாள். அழகேவடிவெடுத்தாற்போலுள்ள பத்மாவினியினுடைய கேள்வனுடைன் கலந்துரசிக்கும்படி திருக்கோளூரெம்பெருமானிடத்தில்ஸ்நேகமனஸையுடையவளாய்த்தாய்மாரான எங்களை விட்டுவிட்டவளான என் பெண், மனவேதனையால் துர்ப்பலமடைந்து நுண்ணிடை மேல் சிரம மிகுதியால் கையை வைத்து நொந்து நொந்து கண்

ணீர் பெருகப் பெருகத் தன்ஆசையே தனக்குத் துணையாகப் போனவள் அந்த க்ஷேத்திரம்புக வல்லவளோ என்கிறாள்.

9-ம் பாசுரம்.

காரியநல்லனகளவைகாணிலென்கண்ணனுக்கென்
றீரியாயிருப்பாளிதெல்லாங்கிடக்கவினிப்போய்ச்
சேரிபல்பழிதூவியிரைப்பத்திருக்கோளூருக்கே
நேரிழைநடந்தாளெம்மையொன்றுநினைக்கிலளே.

பதக்குறிப்புக்கள்:-- என்று + ஈரியிருப்பாள்-ஈரியிருத்தல் - மனம் இரங்குதல். (உரை) காரியம் நல்லனகள் அவை-காரியம் செய்யப்பட்டது, நல்லனவைகள்-மனிதர்ஸௌகரியத்துக்காகச் சமைத்துவைத்தநல்லவஸ்துக்களைக் கண்ணனுக்கென்று மனம் வைத்து அமைத்துக்கொள்ளுகிறவள் - இதெல்லாம் கிடக்க-இவ்வஸ்துக்களெல்லாம்எப்படிவேணுமானாலும்ஆகட்டுமென்று உபேக்ஷித்து, இனி, சேரி - கிராமத்தார், பல பழி - பலவிதமான நிந்தைகள்-தாயைவிட்டு அகன்றாள்-துணையின்றித் தனியே போனாள்-பகவானைத் தானே நாடிப்போனாள் - இது முதலானதுகளை-தூவி - விரைத்து, இரைப்ப - பழி கூற, திருக்கோளூருக்கே, நேரிழை-நல்லஆபரணங்களையணிந்தபெண்,நடந்தாள் - கணமாத்திரம் யோசிக்காமல் போயினாள் - எம்மை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.

10-ம் பாசுரம்.

நினைக்கிலேன்றெய்வங்காணெடுங்கணிளமானினிப்
யனைத்துலகமுடையவரவிந்தலோசனனைத் [போ
தினைத்துணையும்விடாளவன்சேர்திருக்கோளூர்க்கே
மனைக்குவான்பழியுநினையாள்செல்லவைத்தனளே.

பொழிப்புரை:—தன் திருக்கண்களின் அழகாலே தோற்பித்து எல்லா உலகங்களையும் அடிமையாக்கிக் கொண்டிருக்கின்றவனுடைய கண்களைக் கண்டல்லது கணமும் ஆற்றியிராத நெடுங்கண்ணுடைய என் இளமான் இனித் தான்செய்வது குடிப்பழிஎன்பதையும் நினையாதே அவன் சேர் திருக்கோளூருக்கே போய்ப் புக்காள். இவளைப் பிரிந்த வியஸநத்தை நினைக்கக் கூட மனம் கூசுகின்றது. என் செய்வேன்? என்றால் செய்யத் தக்கது ஒன்றுமில்லையே. ஐயோ? தெய்வங்களே! என்று தாய் அலற்றிக் கூறுகிறாள்.

குறிப்பு:—செல்ல வைத்தனள் - திருடபுத்தியோடு சென்றாளே. பிராட்டியின் தாய் இப்பத்தின் துடக்கத்தில் அஞ்சின குடிப்பழியை இன்னமும் நினைத்து இன்னாதாகிறாள். இதனால் இப்பிராட்டிக்குப் பகவானிடத்தில் நீங்காத அபிமானமும் ஆசையும் சொல்லியதாயிற்று.

11-ம் பாசுரம்

வைத்தமாநிதியாம்மதுசூதனையேயலற்றிக் [ன
கொத்தலர்பொழில்சூழ்குருகூர்ச்சடகோபன்சொன்
பத்துநூற்றுளிப்பத்தவன்சேர்திருக்கோளூர்க்கே
சித்தம்வைத்துரைப்பார்திகழ்பொன்னுலகாள்வாரே.

உரை:—வைத்த - தனக்கு ஆபத்துக்குஉதவும்படியாக, மா-பெரிய, நிதியாம் - உடனே செலாவணிக்கு உபயோகிக்கக்கூடியபொன்களாய், மதுசூதனையே-மதுவென்ற அசுரனை ஸம்ஹரித்த கிருஷ்ணபகவானையே, அலற்றி - ஸ்துதியாகப் பலவிதமாகப் போற்றி (அதாவது-கிருஷ்ணபகவானையே ஆபத்காலத்திலே இரக்ஷகனையும், ஸர்வபோகங்களும் அவனைக்கொண்டே யடையவல்லனையும், அவனை அனுபவிப்பதிலியே ஸர்வ ரஸங்களும்வாய்க்கச் சக்தி கொடுப்பவனையும், கேடு இடறு பழி அபவாதம் வருங்கால் அவைகளினின்றும்மீட்டுய்ப்பவனையும்மனந்தீர்ந்துநிற்றல்) கொத்தலர்-புஷ்பங்கள்கொத்துக்கொத்தாய்ப்பூக்கும்சோலைகள்சூழ்ந்தகுருகூர்ஆழ்வார் பாடிய இப்பத்தையும், சித்தம் வைத்து - ஏகாக்கிரமனஸாய்ச் சிந்திக்கிறவர்கள், திகழ்கின்ற வானுலகத்தை அவனது ஆணையால் சுவயேச்சா விநியோகமாய் ஆள்வார்கள்.

விசேஷக்குறிப்பு:-இந்தத்தசகத்தில் பகவான் அவனைவிட்டுப் பிரிந்திருக்கும்ஆச்ரிதர்விஷயத்தில் அவர்களுக்கு அச்சமயங்களிலுண்டாகும் அபவாதம் பயம் முதலியவைகளினின்று இரக்ஷித்துக் காப்பாற்றுவானென்று கற்பிக்கிறார்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—6. கலன்காண் படலம்

[381-வது பக்கத் தொடர்ச்சி]

எவ்வகை மானுட னென்று செப்பினான்

தன் தேவியைப் பகைஞன் கைக்கொளும்படி விட்டிருந்த பழியினுக் காற்றாமல் பதைத் தயர்ந்த இராமனைத் துயரெனும் அளக்கரினின்று நீக்கிய சுக்கிரீவனை நோக்கி,

ஐயநீ யாற்றலி னாற்றி னேனல
துய்வனே யெனக்கிதி னுறுதி வேறுண்டோ
வையகத் திப்பழி தீர மாய்வது
செய்வனின் குறைமுடித் தன்றிச் செய்கலேன்

[ஐயனே, நீ என்னைத் தேற்றியதால் இப்பொழுது ஒருவாறு தேறினவன் போல் இருக்கின்றேனே யன்றி, இனி நான் உயிர் வைத்துக்கொண்டிருப்பேனோ. மாள்வதைக் காட்டிலும் எனக்குவேறு என்ன நன்மைஇருக்கின்றது; ஆகையால், பூமியில் என்னைச் சூழ்ந்த இப்பழி தீரும்படி தற்கொலை புரிந்துகொள்வேன்; ஆயினும், உன்குறையை முடித்தபின் அன்றி அது செய்யமாட்டேன்]

என இராமன், தான் இறப்பதெனினும், இயம்பியபடி சுக்கிரீவனது குறையை முடித்தபின்னரே இறப்பதோர் துணிவைச் சாற்றினான். தங்குறை தீர்வுள்ளாமல் தளர்ந்து பிறர்க்குறாஉம் வெங்குறை தீர்க்க முற்படுகின்ற விழுப்பம், கறையிருளை நீக்கக் கருதாமல் உலகின் நிறையிருளை மேல்நின்று நீக்குகின்ற திங்களுக்கு மாத்திரமேயன்றிச் சூரியனுக்கும் உண்டென்று காட்டப் புக்கனர்போல் அச்சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவன் முன்னும், சூரியகுலத் தோன்றலாகிய இராமன் இப்பொழுதும் பேசுமிக்கொள்கை பாராட்டத் தக்கது.

இன்னவாறு வானர வீரனும் அயோத்திவள்ளலும் ஒருவரை யொருவர் உதாரசிந்தையில் விஞ்சுதற்கு முயலுமளவில்,மாருதி இடைவந்து, சுக்கிரீவன் குறை முதலில்முடிவதே இன்றியமையாததென்றுகாட்டி அச்சுக்கிரீவன் முன் உரைத்தபடி அது பின்னர் ஆவதெனும்பேச்சை மறுத்து,மற்று, அது முன்னர்

முடிந்ததெனின் பின்னர் இராமன் உயிர்துறந் தொழிவதின்றியே உறுதி வேறுள தென்பதையும் செவ்வியின் செப்புகின்றான். கூறுவானவன்:—

கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மக னாக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டின லன்றி நேடரி
தடும்படை யரக்கர்த மிருக்கை யாணையாய்

[எல்லாவிடத்தும் உன் ஆஜ்ஞை செல்லப்பெற்றவனே, கொடியவைகளைசசெய்கின்ற வாலியை முதலிற்கொன்று, கடுமையான கிரணங்களையுடைய சூரியனது புதல்வனாகிய சுக்கிரீவனை அரசனாக்கி, அவனைக் கொண்டு, செழித்துவளர்ந்துள்ள பெரிய வானரசேனையைச் சேர்த்தா லல்லாமல், கொல்கின்ற படைகளையுடைய அரக்காது இருப்பிடத்தைத் தேடிக்கண்டுபிடிப்பது அரிது.]

வானதோ மண்ணதோ மற்று வெற்பதோ
ஏனைமா நாகர்த மிருக்கைப் பாலதோ
தேனுலாந் தெரியலாய் தெளிவ தன்றுநா
மூனுடை மானிட மான துண்மையால்

[வண்டுகள் மொய்க்கும் மலர்மாலையை அணிபவனே, அவ்வரக்கர் இருப்பிடம் வானத்திலுள்ளதோ, அல்லது இப்பூமியி லிருக்கின்றதோ, அல்லது, மலையில் இருக்கின்றதோ, அல்லது, பெரியநாகலோகத்தில்தான் உள்ளதோ, நாம் குறைபாடுடைய மனிதப்பிறப்பேயாதலால்,தெரிந்து கொள்ளக்கூடிய தன்று.]

'நாம் ஊனுடை மாநுடம்' என்று இச்சொல்லின் செல்வன் கூறுமிது விளைக்கின்ற ஐயம் சிறியதன்று. அனுமனுடன் சுக்கிரீவன் வாலி முதலாயினோரும், அறிவு ஆற்றல் முதலியவைகளில் எத்துணை உயர்ந்தவர்களேனும், மானுடப் பிறவியில் இவர்களை வைக்காமல் குரங்கென்றே கொள்ளல் இயற்கையாயுளது. வாலியும் தன்னை எப்பொழுதும் மனிதப் பிறவியிலிருந்து வேறு படுத்தியே பேசுகின்றான். "ஒலிகடல் உலகந் தன்னில் ஊர்தரு குரங்கின் மாட்டே கலியது காலம் வந்து பரந்ததோ கருணைவள்ளால்" என்று அவன் இராமனைவற்புறுத்திக்கேட்கும்போது, மனிதருக்கு இல்லாத கலிகாலம் குரங்குக்குத்தானே வருதல் வேண்டும் என வேறுபடுத்துவது வெளிப்படை. பின்னும், வாலி தன் தம்பியின் மனைவியை எய்திய குற்றத்திற்குரிய தண்டனையையேபெற்றதாக இராமன் எதிர் உரைத்தபோது அவ்வாலி, "நுங்களைப்போல் எம்மைப் பிரம்மன் செய்திலன்—விலங்குப் பிறவியுடைய நான் அதனால் குற்றம் உற்றிலேன்" எனச் சாற்றியதும் மானுடமானது உண்மையலாமையை உணர்த்துகின்றது. இதனை மறுத்து இராமன், "நன்னெறி காண்டலின்...விலங்கலாமை விளங்கியது" என்றது இவர்களைப் பிறப்பால் மானுடமாக்குகின்றதெனக் கொள்ளலாகாது. பிறந்த யாக்கைவரையில் வாலி விலங்கே என்பதைஇராமனும் ஒவ்வுகின்றான். ஆயினும், அறிவு குணம் முதலியவைகளால் 'மனிதனென்று' பாவிக்கப்படத்தகுந்தவன் என்பதே இராமனது கருத்து. இல்லையேல் இராமன் உதாரணமாகக் காட்டும், கஜேந்திரன் ஜடாயு முதலியவைகளும், "நாம் மானிடமானது உண்மை" என்று பேசிவிடும். பகுத்தறிவில்லையேல் மக்களும் விலங்கே என்னவும் இராமன் வகுத்துக் காட்டுகின்றான். ஆதலின் இராமன் அங்கு வாலியை மனிதன் என்றே பாவித்ததிலிருந்து இங்கு அனுமன் கூற்றிற்கு அமைதி காணலியலாது. பேசுந் திறமை மனிதஇனத்தின் சிறப்பிலக்கணமாதலின், அதுபற்றி அனுமன் தன்னையும் சுக்கிரீவன் முதலாயினோரையும் மானுடராக்கிக் கொண்டான் என்று எண்ணலாமோ வெனின், இராமன் பின்னர் வாலியை விலங்கினின்று பிரிப்பதற்கு இந்தக் காரணத்தைக் கைக்கொள்ளவில்லை.குரங்கே என்னத்தக்க முகமுடைய மனிதர் சிலருள ராதலின், முகத்தினமைப்பைக்கொண்டு மதிக்காவிடத்தும், வாலின் இருக்கை அனுமனது வார்த்தையை வெகுளேம் மறுக்கின்றதே. வாலிருப்பினும், வானரப் பெயரால் தாம் மனிதரே என்பதை இவன் உண்மைப்படுத்துகின்றானோ, யாதோ. இதனோடு நிற்கவில்லை இவ்வனுமன்; 'நாம்' என்று இராமனையும் உளப்படுத்திக் கொள்கின்றான். இதனால் இவன் உயர்ந்தால் உயர்க, மற்று, இராமனையும் தன்னினத்திற்கு இழுத்துக் கொள்வதாய் முடியலாமே. "மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா மின்னா னெனப்படுஞ் சொல்" என்ற அத்திருவள்ளுவர் வாக்கு அவர் நினைத்திரா வகையில் இங்கு மெய்ப்பிக்கப்படுகின்றதுபோலும்.

தம்முடைய பிறவியி னுண்மை யெதுவாயினும், அனுமன் ஊனுடைத் தமக்கும் அவ் வரக்கர்களுக்கும் உள்ள வேற்றுமையை,

எவ்வுல கங்களு மிமைப்பி லெய்துவர்
வவ்வுவ ரவ்வழி மகிழ்ந்த யாவையும்
வெவ்வினை வந்தென வருவர் மீள்வரால்
அவ்வவ ருறைவிட மறியற் பாலதோ

[அரக்கர்களோ இமைப்பொழுதில் எல்லா வுலகங்களுக்கும் செல்லவல்லவர். அங்குத் தாம் விரும்பியவைகளைக் கவர்ந்துகொள்வார். அவரவர் செய்த தீவினைகள் போல எங்கிருந்து வருகின்றார்கள் என்பதுதெரியாமல் சடுதியில் வருவார், மறுபடி எங்குப்போகின்றார்கள்என்பதுதெரியாமல் மீண்டுவிடுவார். ஆகையால், அத்தகையவர் வசிக்கும் இடம் நம்மால் அறியத்தக்கதோ]

என விளக்கி,

ஒருமுறை யேபரந் துலகம் யாவையுந்
திருமக ளுறைவிடந் தேர வேண்டுமால்
வரன்முறை நாடிட வரம்பின் றுலக
கருமையுண் டளப்பரு மாண்டு வேண்டுமால்

[ஒரே சமயத்தில் உலகம் முழுவதும் சென்று பரவிச் சீதை யிருக்கும் இடத்தைத் தேடி அறியவேண்டும். அவ்வாறின்றி, ஒன்றன்பின் ஒன்றாகத் தேடுவதென்றால், உலகம் வரம்பற்றதாகையால் அது இயலாது. அதுவுமன்றி, அளவற்ற பல வருடங்களும் வேண்டியிருக்கும்]

எழுபத் தாகிய வெள்ளத் தெம்படை
யூழியிற் கடலென வுலகம் போர்க்குமா
லாழியைக் குடிப்பினு மயன்செ யண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினுங் கிடைத்த செய்யுமால்

[எழுபதுவெள்ளந்தொகையுடையஎமதுவாநரச்சேனை, ஊழிக்காலக் கடலென்ன உலகம்முழுவதும் பரந்து மூடவல்லது. அன்றியும், கடலைக்குடிக்கவேண்டுமென்றாலும், பிரம்மன் படைத்த அண்டத்தைக் கீழே பிடித்து எடுக்க வேண்டுமென்றாலும், நேர்ந்தகாரியங்களையெல்லாம்செய்யவல்லது.]

ஆதலால் அன்னதே அமைவதாமென நீதியாய் நினைந்தனென், என அனுமன் நிகழ்த்துமளவில்,சுக்கிரீவனதுகுறை முதலில் முடியவேண்டுவதன் இன்றியமையாமையை அனுமன் அரிதின் வற்புறுத்துகின்றான். அரக்கர் இருப்பிடம் தெரிதல் அருமை, நினைத்தபோது நினைத்த இடத்திற்கு மாறவல்லவர். ஆதலால் இரண்டொருவர் சென்று இவ்வுலகினை வரிசையாய்த் தேடிவருதல் பயன்படாது; உலகம் முழுவதையும் ஒரே சமயத்தில் தேடவேண்டும்; இதுசெய்ய அளப்பரிய சேனை அவசியமாயிருக்கின்றது. சுக்கிரீவன் அரசனானால்தான் அத்தகையதோர் சேனை தம் உதவிக்குக்கிடைக்கும். ஆதலின், வாலியைக்கொன்று சுக்கிரீவனை அரசனாக்குவதைப் பின்னே வைத்துக் கொள்வதென்பது பிழை. அன்றியும், இதனை முதலிற் செய்துவிட்டால் இராமன் பிறகு தன்னை மாய்த்துக்கொள்ளவேண்டுமென்பதும்வீண்பேதைமையே. அளவற்ற ஆற்றலுடைய குரங்கின் சேனை எழுபது வெள்ளம் ஏவக் கிடைக்குமாயின், சீதையைத் தேடியடைதல் அருமையாமோ! அவள் இருப்பிடம் தெரிந்துவிட்டால் பிறகு அவளை மீட்பது இராமனைப் போன்றவோர்வில்லாளிக்கு எளிதே. அவளை மீட்டிய பின், முன் இழந்த பழி தீர்ந்துவிடும். எனின் இராமன் உயிர்வாழலாம்.

இராமனும் இதற்கு ஒவ்வி வாலிபால் வழிக்கொள்வானாயினன். தந்தை மெய்பிழைக்கப் பழியாமெனக் கானகமேவி மனைவியைப் பறிகொடுத்த வோர் பழிக்காளானமை கருதி வருந்துமிவன்,மற்று,அப்பழிதீருமாறு வாலியைக்கொன்று—வேறோர் பழியே வருந்திப் பெறுகின்றானோ? இனிப் பார்ப்போம்.

1934-வது வருடத்திய வால்யூம் 7. அட்டவணை

(ஜனவரி முதல்—ஜூன் வரையில்)

தலையங்கம்

இதழ்			பக்கம்
1 சர்க்கரையுஞ் சந்திரனும் ...		...	1
2 நட்பின் உதவி ...		...	17
3 ஒதாதார் யாதாவார் ...		...	33
4 உண்மையே யுண்மை யம்மா	1	...	49
5 ,, ...	2	...	65
6 ,, ...	3	...	81
7 ,, ...	4	...	97
8 கல்சரின் அவசியம் ...	1	...	113
9 ,, ...	2	...	129
10 ,, ...	3	...	145
11 ,, ...	4	...	161
12 கல்சரும் கவிதையும் ...	1	...	177
13 ,, ...	2	...	193
14 ,, ...	3	...	209
15 ,, ...	4	...	225
16 ,, ...	5	...	241
17 ,, ...	6	...	257
18 சுயகல்சர் ,, ...	1	...	273
19 ,, ...	2	...	289
20 ,, ...	3	...	305
21 ,, ...	4	...	321
22 ,, ...	5	...	337
23 ,, ...	6	...	353
24 கல்சரை அடையும் வகை ...	1	...	369
25 ,, ...	2	...	385

கம்பராமாயணம்—கிஷ்கிந்தா காண்டம்

1. பம்பைப் படலம்

1 முன்னுரை ... 11
2 கம்பரும் பம்பையுங் கலந்த தன்மையே ... 29
3 ஒன்றே நினைத்துஞ் செய்வன பலவே ... 36
4 கலங்கா வொருபொருள் புலம்பு மாறே ... 61

2. அநுமப் படலம்

5 இருள்தீர்ந் தேகிட வொளியே வேண்டும்... 78
7 எண்ணிய வாங்கே யெய்துமாங் காட்சி... 102
8 பின்னர்க் காணும் பெற்றிய தன்றே ... 125
9 எதுவென் றுணா முதனா லுதவும் ... 142
10 ஊச லென்னப் போய்வரு பாசுரம் ... 156
11 பொய்மையுநலமெனப்புகலவொண் ணுமோ 170
12 குரங்கினைச் சரணங் கோரிய சரிதம் ... 182

3. நட்புப் படலம்

13 அனுமனு லாழியான் வாழுவா னுயினன் 199
14 தோற்ற மானுட மீண்டும் வென்றது ... 214
15 அறிவுந் தவமு மப்புறந் தெரியும் ... 229
16 நட்பின் மெய்ப்பய னல்க நேர்வதே ... 249
17 பதமிலாப் பரிகசம் பகர லாகுமோ ... 261
18 பொய்யில் லாமற் புகன்றன னனுமன் 279
19 ஆபா தொன்றும் வாயே தந்தான் ... 300
20 சோதனை யாமோ விதி ... 317

4. மராமரப் படலம்

21 உயர நவில்வா ரயரவும் வேண்டும் ... 332

5. துந்துபிப் படலம்

22 தம்பியின் திறமையு மன்ன தன்மையே... 343

6. கலன்காண் படலம்

24 பாத மன்றிப் பார்த்தில னிளவல் ... 378
25 எவ்வகை மானுட னென்று செப்பினன் 394

தமிழ்ப் பாடம்

இத. வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச்சருக்கம். பக்.

1 பாரதக்கதை முன்தொடர்ச்சி; புணரிலக்கணத்தின் நான்குவகை ... 3
2 ,, ; உயிர் + மெய்—4 பிரிவுகள் ... 19
3 (செய்) ஞானமன்பொ. (இலக்) சுட்டு or வினு + மெய் ... 35
4 (செய்) செஞ்சொன்முனி, அருஞ்சமரம் செய்வரா. (இலக்) உ + ய. குற்றியலிகரம், ட.காறகரமெய்கள் இரட்டிப் புணர்தல் ... 57
5 (செய்) வயிரமெனுங், அரவுயர்த்தோ, குரவரையும், கோதிலா, (இலக்) உயிர் + மெல்லினம் or இடையினம். நொ, து, பூ, ஐ, க்குப்பின், சில மெல்லின இடையின மெய்கள் இரட்டிப் புணர்தல். ... 69
6 (செய்) நீ தூது, முந்தூர்வெம்,மூத்தோன் மற், விரிகுழற்பைந். (இல) மென்றொடர்க் குற்றிய லுகரப் புணர்ச்சியில் முன்னின்ற மெய்திரிதல் - வேந்து + அவை-வேந்தவை 83
7 (செய்) போர்முடித்தா, பரிவுடன்மற்; (இலக்) கருத்துடையடையணி (பரிகராலங்காரம்.) பின்வருநிலையணி 4 வகைகள், சொற்பொருள் பின்வருநிலை (உபயாவருத்தி) சொல் பின்வருநிலை (சப்தாவ்ருத்தி) பொருள் பின்வருநிலை (அர்த்தாவ்ருத்தி) உவமைப் பொருட் பின்வருநிலை ... 100
8 (செய்) உரிமையுடன், சூடுகின்ற, மலைகண்ட, (இலக்) உயிர் + மெய் ... 116
9 (செய்) வெம்புயலீ, மைக்கால, தீண்டாத (இலக்) உயிர் + மெய், எழுவாய்த் தொடர், பொதுவிதி ... 131
10 (செய்) பார்த்தனிவை, நகுலனிசை, சிந்தித்தபடி, முருகவிழ்க்கும், ... 147
11 (செய்) நீ பாரதவமரில், பாராளக்கன்ன, முன்னநீ, மாயவனு, நீதேவ, அன்பாலின் றென்னை, என்றென் றிறைஞ்சி 163
12 (செய்) தருமனுக்குங், சாலக்கனகன், கற்றைக்குழல், மன்றிலழைத்தெனக். (இலக்) உயிர் + மெய்—எழுவாய்த்தொடர், சிறப்பு விதிகள் ... 179
13 (செய்) தண்டிருந்த, சண்டமுகி, தொல்லாண்மை. (இலக்) சொல்பொருள் பின்வரு நிலையணி. உயிர் + மெய், இரண்டாம் வேற்றுமை. எழுவாய்த் தொடர்க்கும் இரண்டன் தொகைக்கும் மயக்கம் ... 196
14 (செய்) அன்று தூது, மின்னுமாமுகில், சீர்வலம்புரி, தொல்பகிரதி. (இலக்) கருத்துடையடையணி. உயிர் + மெய், இரண்டன் தொகை, சிறப்புவிதிகள். ... 211
15 (செய்) இருந்துவந், கோடுகொண்ட, உள்ளினு, முன்னமே துயின், மும்மையாகிய. (இலக்) திரிபு அணி. மயக்க அணி தோன்றும்படி அமையவல்ல ஐய அணி. உயிர் + மெய்,இரண்டன்தொகை,வடமொழி... 227
16 (செய்) பொங்கராவணை, காவன் மன்னர், துன்னுகங்கை, (இலக்) உயிர் + மெய் - மூன்றும் வேற்றுமை ... 243
17 (செய்) முன்னகங், என்னினின்னி, நீ வெறுக்கிலென்,(இலக்)கருத்துடையடையணி, உயிர் + மெய் - நான்காம் வேற்றுமை ... 259

இதழ். பக்கம்.

18 (செய்) மாடளிக்குல, பொய் வளர்ந்த, புன்பிறப்புடைய (இலக்) உயிர் + மெய் - ஐந்தாம் வேற்றுமை. ... 275

19 (செய்)ஏவிலங்கு, அளிவருங்குழல், அன்னையானவரு, (இலக்) உயிர் + மெய் - ஆறும் வேற்றுமை ... 295

20 (செய்) வன்பிணு, முதல்விழை, இன்னவாறிவன் ... 308

21 (செய்) ஈண்டவர், சொல்லிரண்டு, காரணைத்து. (இலக்) உயிர் + மெய் - ஏழாம் வேற்றுமை. எட்டாம் வேற்றுமை. ... 327

22 (செய்) பிதாமகன், நீயிருக்க, (இலக்) உயிர் + மெய் - வினைமுற்றுத்தொடர், வினையெச்சத்தொடர், பெயரெச்சத்தொடர் ... 339

23 (செய்) என்றுகூற, அம்பரத்தவ, திசையணைத்திலும் (இலக்) உயிர் + மெய்-இடைச்சொற்றொடர். ... 355

24 (செய்) அவன் மொழிந்த, இரவிமைந்தனொடு (இலக்) தன்மேம்பாட்டுரையணி, உயிர் + மெய் - உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி. ... 376

25 இலக்கணம்—உயிர் + மெய் - பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை. ...

மதுரைக் கோவை

1 இயற்கைப் புணர்ச்சி :—காட்சி, ஐயம், தெளிதல், வியத்தல், புணர்ச்சி துணிதல், குறிப்பறிதல், கலந்துமகிழ்தல், தெய்வத்தை வியத்தல், கிளவி விரும்பல், இருவயினொத்தல். ... 14

2 இயற்கைப்புணர்ச்சி:—நன்னய முரைத்தல், பிரிவுணர்த்தல், பருவரலறிதல், பிரியேனென்றல், அருட்குண முரைத்தல், பிரியிற்றன தாற்றுமை யுரைத்தல், இடமணித்தென்றல், பிரிந்துவருகென்றல், உயிரென வியத்தல், அருமையுரைத்தல்.
இடந்தலைப்பாடு:—தலைவன் தலைவியை நினைதல், தலைவி தலைவனை நினைதல், தந்ததெய்வந் தருமெனச் சாற்றல், பொழில் கண்டு மகிழ்தல், தனிநிலை காண்டல், மெய்தொட்டுப் பயிறல். ... 24

3 இடந்தலைப்பாடு:—பொய்பாராட்டல், இடம்பெற்றுத் தழாஅல், கொடியிடம் புகுதல், கொடியிடம் புகுதற் கிரங்கல், கண்புதைத்திரங்கல், நீடுநினைந் திரங்கல், நாண் விடவருந்தல், வறிதுநகை தோற்றல், முறுவற்குறிப்பறிதல், மருங்கணைதல், கூடுதலுறுதல், கலந்துழி மகிழ்தல், நலம்பாராட்டல், பயந்தோர்ப் பழிச்சல், தீராத் தேற்றம், ஏற்புற வணிதல், விடுத்தல், இன்னங்கூடுங்கொலென வருந்தல், நீங்கற்கருமை கூறல். ... 44

4 பாங்கற் கூட்டம்:—தலைவன் பாங்கனை நினைதல், பாங்கன் வாட்டம் வினுதல், உற்றதுரைத்தல், பாங்கன் கழறல், கழற்றெதிர் மறுத்தல், பாங்கன் கவன்றுரைத்தல், விதியொடு வெறுத்தல், பாங்கன் நொந்துகூறல், இடமும் வடிவும் வினுதல், பாங்கன்வற்புறுத்தல், பாங்கன் குறிவழிச் சேறல், பாங்கன் தலைவியைக் காணுங்கொலென வருந்தல். ... 55

5 பாங்கற் கூட்டம்:—இணையுருக் கண்டவன் துணைவனுக் கிரங்கல், பாங்கன் தலைவியைக் காண்டல், பாங்கன் தலைவியை வியத்தல், பாங்கன் தலைவனை வியத்தல், இகழ்ந்ததற் கிரங்கல், பாங்கன் தலைவியைக் கண்டமை செப்பல், தலைவன் தலைவியை வியத்தல், தலைவன் குறிவழிச் செல்லத் துணிதல், தலைவன் தலைவியை முகம்புகுதல், கலந்துழி மகிழ்தல், நலம் பாராட்டல், பாங்கியொடு வருகென்றல், ஆயத்துய்த்தல், தலைவிபாங்கியையறிவித்தல். ... 72

6 மதியுடன் படுத்தல்:—பாங்கியை நினைதல், புனங்கண்டு மகிழ்தல், கிள்ளை வாழ்த்து, புனத்திடைக் கண்டு மகிழ்தல், குறைகூறத் துணிதல், ஊர்வினுதல், வழிவினுதல், பேர் வினுதல், வேழம் வினுதல், கலைவினுதல், மொழிபெறுது வருந்தல், இடைவினுதல், மனம் வினுதல், தோழி வினுவெதிர் மறுத்தல், நகைத்துரை, கையுறை காட்டல், கருத்தறிவித்தல், குறைகூறல். 91

7 குறையுற வுணர்தல்:—தோழி ஐயுறுதல், இருவருமுள்வழி அவன்வரவுணர்தல், நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைத்தல், செலவு, பயில்வு, தலைவன் குறிப்பறிதல், தலைவி குறிப்பறிதல், இருவர் குறிப்புமுணர்தல். ... 110

8 முன்னுற வுணர்தல்:—தோழி தலைவியை வாட்டம் வினுதல்.
நாணநாட்டம் :—பிறை தொழு கென்றல், வேறுபடுத்திக் கூறல், வேறுபாடென்னெனக் கூறல், நெறிப்படுநாட்டத்து நிகழ்ந்தது மறைத்தல், சுனைவியந்துரைத்தல்.
நடுங்க நாட்டம்.
சேட்படை:—தலைவன் முகம்புகுதல், தழைக் கையுறை காட்டல், தழை தகாதென்றல், முத்தக்கையுறை காட்டல், முத்தக்கையுறை மறுத்தல், மாணிக்கக் கையுறை காட்டல், மாணிக்கக் கையுறை யேலாதென மறுத்தல், காவியம்போது கையுறை காட்டல், இல்லையென்று மறுத்தல் ... 120

9 சேட்படை:—படைத்துமொழி கிளவி, அறியேனென்றல், அறியேனென்றவட் கறியவுரைத்தல், பெருமையிற் பெயர்த்தல், குலமுறை கிளத்தல், குலமுறை கிளத்தற் கெதிர்மொழி கொடுத்தல், உலகுரைத் தொழித்தல், வரைவு மறுத்தல், அருமையினகற்சி, தலைவனுற்றதுரைத்தல், அவளறிவுறுத்துப் பின்வாவென்றல், நின்குறை நீயே கூறென்றல், தலைவனைப்பேதைமையூட்டல், இளமைத்தன்மை கூறல், இளையவளென்றவட் கெதிர்மொழிகூறல், விளைவிலளென்றல். ... 140

10 (மடற்பகுதி) மூதறிவுடைமை கூறல், என்னை மறப்பி னெண்ணிய தரிதென நகுதல், நகையாற்றுமைகூறல், அஞ்சியச் சுறுத்தல், தலைவியை நொந்துகூறல், மடற்றிறம் நினைதல், மடலேற்றை யுலகின் வைத்துரைத்தல், தலைவன் மடலேறுவேனென்றல், தன்னொடு மவளொடுஞ் சாற்றி வெளிப்படக் கூறல், தோழி எழுத வரிதென்றல், எழுத வெழுகென்றல், அருட்குணங் கூறி மறுத்தல், தோழி மடல்விலக்கல் ... 154

11 குறைநயப்பு:—தலைவனைக் கண்டமை கூறல், மறுத்தலரிதென்றல், மறைத்தவளருகல், தோழி புலந்துகூறல், தலைவன் மடலேறுவனென்றல், தலைவிநோதல்.

இதழ். பக்கம்.

தழையேற்பித்தல்:—தோழி தழையேற்றல், கூறுவன வறியாது வந்தேனெனத் தழையேற்பித்தல், கைம்மாறு செய்யவேண்டுமெனத் தழையேற்பித்தல், தலைவியைத் தழையேற்பித்தல், தழைவியந்துரைத்தல் ... 166

12 பகற்குறி:—பகற்குறி யிடங்கூறல், குறியிடத்துக் கொண்டு சேறல், குறியிடத்துய்த்து நீங்கல், இடத்துய்த்து நீங்குந் தோழி தலைவனோடு கூறல், பகற்குறி யெதிர்ப்பாடு, கலந்துழி மகிழ்தல், நலம் பாராட்டல், ஆயத்துய்த்தல், மறைந்தவற் காண்டல், தோழி கையுறை காட்டல், விருந்து விலக்கல், விருந்திறை விரும்பல். ... 187

13 பகற்குறிப் பிழைப்பு:—பொழுதுநீட வருந்திக் கூறல், தோழிகழறல், தலைவியொடு பாங்கி தலைவன் வந்தமை கூறல், தலைவி பொறுத்தமைகூறல், வரைவு கடாதல்.

செறிப்பறிவுறுத்தல்:—செவிலி யைபந் தலைவற்குணர்த்தல், தினைவிளைந்தமை கூறல், களவொழுக்கத்தை வேங்கைநீக்கிற்றெனத் தோழி தலைவற்குரைத்தல், சிறைப்புறமாகத் தலைவி யிரங்கல், தோழிசிறைப்புறமாக வருந்திக் கூறல், தினைகொய்தமை கூறிவருந்தல், புனம்விட் டகல்வோர் விளம்பிக் கூறல், இறைவனிலைக் கிரங்கல், தலைவற்கிடங் கூறிற்றில மெனவருந்தல், வறும்புனத் தழுங்கல், மனமழிந்திரங்கல், பதிநோக்கி வருந்தல்... 205

15 இரவிற்குறி:—இரவிற் குறிவேண்டல், ஆற்றது தீமையாய் இரவுக்குறிமறுத்தல், ஆறெளிதென்றல், நினக் கேதமுறத் தலைவி யிறந்துபடு மென்றல், தலைவ னாற்றா துரைத்தல், தோழியுடம்படுதல், தோழி தலைவியோடு இரவுக் குறிவேண்டல், வருந்தொழிற் கருமை நினைந்து தலைவி வருந்தல், தலைவி இரவுக் குறி நேர்தல், தலைவி இரவிற் குறி நேர்ந்தமை தோழி தலைவற் குரைத்தல், இரவிற்குறியிடம் வினாதல், இரவிற்குறி யிடங்கூறல், தாய் துயிலறிதல், தோழி தலைவன் வந்தமை கூறல், இரவிற் குறி யிடத்துத் தலைவியைக்கொண்டு சேறல், குறி யிடத்து நீங்கல், குறி யெதிர்ப்பாடு, கலந்துழி மகிழ்தல், நலம் பாராட்டல், விடுத்தல், வரைவு கடாதல், ஊர் புகுகுறிகூற்றென்றல், அவனளி சிறத்தல். ... 235

17 இரவிற் குறி பிழைப்பு:— அல்ல குறி தோழி தலைவிக்குரைத்தல், அல்ல குறி தலைவன் சிறைப்புறமாகத் தலைவி கூறல், காவில் கடுகுதல், காட்சியாசையினிற் களம்புக்குக் கலங்கல், தலைவிபுறம் போதல் கண்டு செவிலியையுறுதல், செவிலிதோழியை முனிதல், அய்யச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப் பொய்யெனமாற்றி மெய்வழிக் கொடுத்தல், செவிலியைத் தலைவன் சிறைப்புறமாகத் தோழி தலைவிக் குரைத்தல், இரவுவாரலென்றல், பகல்வாரலென்றல், இரவும்பகலும்வாரலென்றல், தோழி தலைவனை நொந்து கூறல். 269

18 ஒருவழித் தணத்தல்:—அலரறி வுறுத்தல். ஒருவழித் தணப்புக் கூறல், பிரிந்தவழிக் கலங்கல், ஆடிட மறந்தமை கூறல், பெற்றவழி மகிழ்தல், தற்காட்டுறுத்தல், பலவகையோடு புலம்பல், மதியொடு புலம்பல், கடலொடு புலம்பல், கடலொடு முனிதல், கானலொடு புலம்பல், புள்ளொடு புலம்பல், தன்படர் பிறர்மேற் சாற்றல், இவற்றொடு தலைவற் குரைத்தது, உரைத்திலெனநெஞ்சொடுநொந்து கூறல், கூடலிழைத்தல், தோழியொடு புலம்பல், தோழியாற்றுவித்தல், ஆற்றாமை யுறைப்பு முதலியவற்றாற் கூறல், மாலைப் பொழுது கண்டிரங்கல், இரவினீட்டம், தோழியொடு விட்டுயிர்த் தழுங்கல், நொந்து தோழி யொளித்தல். ... 282

19 வெறியாட்டு:—செவிலி தலைவி மெலிவுகண்டு ஐயுற்றுமொழிதல், கட்டுவிச்சியை வினாதல், கட்டுவிச்சி கூறல், வெறியாடு கென்றல், வெறியாட்டிடத்து வெருவிக்கூறல், தலைவி தோழிக் கறத்தொடு நிற்றல், வெறிவிலக்கல், தோழி செவிலிக் கறத்தொடு நிற்றல், செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்றல்.

வரைவுமுடுக்கம்:—ஒரு வழித்தணந்து வந்த தலைவனொடு தோழி புலந்து கூறல், அயன்மண முரைத்தல், முலைவிலை கூறல், தலைவி யாற்றா துரைத்தல் ... 299

20 உடன் போக்கொருப் படுத்தல்:—தோழி தலைவற்குத் தலைவிகருத் தறிவித்தல், தலைவ னதர தியல்பு கூறி மறுத்தல், ஆதரங்கூறல், பிரியி னுயிர்வாழா ளென்றல், உடன்போக்கைத் தோழி தலைவிக் கறிவித்தல், தலைவி வருந்திக் கூறல், கற்புநிலைகூறி ஒருப்படுத்தல், நாணழிவுக் கிரங்கல், தலைவியுடன் போக்கொருப்பட்டுக் கூறல், தலைவி போக்குடன்பட்டமை தலைவற் குரைத்தல், வண்டற் கையடை, தோழி குறியிடங்கூறல், தலைவியைத் தோழி குறியிடத்துக் கொண்டுசென்று தலைவதற்குக்காட்டி யுரைத்தல், தோழி தலைவியை ஓம்படுத்தல், வழிப்படுத்துரைத்தல். ... 316

21 உடன்போக்கு:—சுரத்திடை கொண்டேகல், தமர் வருவரென் றஞ்சிய தலைவியைத் தேற்றல், சுரத்திடை நலம்பாராட்டல், கண்டோர் விருந்து விலக்கல், தலைவன் தலைவிக்கு நகரணிமை கூறல், தலைவன் தலைவிக்கு நகர் காட்டல், பதிவள முரைத்தல்.

தாயர்புலம்பல்:—செவிலி தோழியை வினாதல், தோழியறத்தொடு நிற்றல், செவிலி தலைவிமென்மை நினைந்திரங்கல், செவிலி தலைவி பருவம் நினைந்திரங்கல், செவிலி நற்றாய்க்குரைத்தல், நற்றாய் புலம்பல், செவிலி கற்புநிலை கூறித் தேற்றல். நற்றாய் மழைமுகிற் பரவல், நற்றாய் புட் பரவல், நற்றாய்வேதியரை நிமித்தம் வினாதல், நாடத்துணிதல் 329

22 செவிலி கூற்று:—கழையொடு வெறுத்தல், குரவொடு வெறுத்தல், சுவடுகண்டிரங்கல், சுரத்தியல் கண்டு வருந்தல், செவிலி யுணர்ந்துடன் வருவாரை வினாதல், செவிலிதனக் கெதிர்வருவார் கூறல், முனிவரை வினாதல் வேதியரை வினாதல், உலகியற்கூறிமறுத்தல்.

மீட்சி:—பின்சென்ற தலைவி வருத்தங் கண்டு தலைவன் மீட்சி கூறல், மீண்ட தலைவிக்குத் தலைவன் வளநகர் காட்டல், மீண்ட தலைவி தன்வரவை யாயத்தார்க் குரையுமென வந்தனர்க் குரைத்தல், தலைவி மீண்டமை கண்டோர் தோழிக் குரைத்தல், தோழி சுரத்தியல் வினாதல், தலைவி தோழிக்குச் சுரத்தியல் புரைத்தல். ... 349

23 வரைபொருட் பிரிவு:—வரை பொருட்குப் பிரிகின்றமை தலைவன் தோழிக்குரைத்தல், தோழி தலைவன் நீயே கூறென்றல், தலைவன் றோழியோடாற்றுவித்த லரிதெனப் பிரிதல், தலைவன் வரைபொருட்குப் பிரிந்தமை தோழி தலைவிக்குரைத்தல், தலைவிபுலம்பல், பரு

இதழ்.　　பக்கம்.
வங் கண்டிரங்கல், தோழி தலைவன் வரவு ரைத்தல், தலைவி மணமுரசொலிகேட்டுவருந்தல், தோழி நிதிவரவுரைத்துத் தலைவியைத் தெளிவித்தல் ... 360

களவு முடிந்தது.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணி மாலை

1 தியாகராஜஸ்வாமி ஸ்தோத்திரம்—ஸ்வாமி கிஸரி (தேவகாந்தாரி) ... 5
2 வரதராஜஸ்வாமி ஸ்தோத்திரம்—வரதராஜ நின்னு (ஸ்வரபூஷணி) ... 28
3 „ —விநதாஸுத (ஹரிகாம்போஜி) ... 46
4 „ —வரதராஜ பாஹிமாம் (மோஹனம்) 59
5 „ —பருலவேடலேனு (பலஹம்ஸ) ... 77
6 „ —ஈவரகுஜுசினதி (சங்கராபரணம்)... 92
7 „ —வநஜநயனுடனி (கேதாரகௌளம்) 109
8 ஸ்ரீநிவாசமூர்த்தி ஸ்தோத்திரம்:—
—தெரதிய்யகராதா (கௌளிபந்து)... 123
9 „ —வெங்கடேசநினு (மத்யமாவதி) ... 139
10 „ —தரமாநீமெகிம (கல்யாணி) ... 155
11 ஸ்ரீரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரம் - ராஜு வெடலெ (தோடி) ... 173
12 „ —ஜனகஜா சமேத (அஸாவேரி) ... 181
14 „ —ஓரங்கசாயீ (காம்போஜி) ... 220
15 „ —விநராத (தேவகாந்தாரி) ... 239
16 „ —ஜுதாமு ராரே (ஆரபி) ... 252
17 „ —கருணஜுடவைய (ஸாரங்க) ... 270
20 ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரம்:—
—ப்ராந்தாவன லோல (தோடி) ... 315
21 „ —கடதேர ராதா (தோடி) ... 331
23 „ —ஹரிஹரி நீயொக்க (புந்நாகவராளி) 355
24 „ —க்ருஷ்ணமாகேமி (புந்நாகவராளி) 381

அப்பர்—64 கலை—31. இதிகாசம்.

1 முன்னுரை ... 10
2, 3. கந்தன் சரிதையும் அப்பரும்—மகேந்திரம் இலங்கை, கந்தமாதனம் 22, 42
4 முருகக்கடவுள் யார் தெய்வம் ... 52
5 முருகக்கடவுள் தமிழ்க்கடவுள் ... 74
6, 7. கந்தன் உருவமும் அருவமும் 94, 99
8, 9, 10. கந்தன் வாவும் அந்தகாரக் கழிவும் 115, 134, 152
11 கந்தன் தன்னிகரில்லாத தலைவன்—புறப்பொருளொழுக்கம், அகப்பொருளொழுக்கம் ... 167
12, 13, 15. கந்தன் சரிதையின் இதோபதேசம் 188, 195, 231
19 இராமன் சரிதை - இராமன் கதை நூலாசிரியர்கள் ... 261

இதழ்.　　பக்கம்.
20, 21. தமிழில் இராமன் சரிதை 212, 324
24 இராவணன் பலம் ... 375

நம்மாழ்வார் வைபவம்

2, 4, 5, 6-ம் பத்து, 3-ம் தசகம் (நல்குரவு) ... 25, 56, 71.
6, 8, 9, 13, „ 4 „ (குரவையாய்ச்சியர்) ... 89, 121, 135, 202.
14, 15, 16, 17, „ 5 „ (துவளில்) ...216, 232, 248, 266.
18, 20 „ 6 „ (மாலுக்கு) ... 286, 313.
21, 23, 24, 25 „ 7 „ (உண்ணுஞ்சோறு) ... 326, 362, 382, 393.

இரவொன்றிற் பல பிழைகள்

Goldsmith's—She stoops to conquer.

13, 14 அங்கம் 1. களம் 1. 203,218
17, 18, 19, 20 அங்கம் 2. களம் 1. 263, 284, 293, 310.
21, 22, 23 அங்கம் 3. களம் 1. 323, 341, 360.

ஷேக்ஸ்பியர் நாடகக் காட்சி

1, 2, 3, 4, 6, 7, 8, 9, ஜான் அரசன். 9, 21, 39, 53, 87, 107, 118, 137.

சூளாமணி (கதைச்சுருக்கம்)

1, 4 5. நாட்டுச்சருக்கம். 10, 51, 75.
7, 10, 12, நகரச்சருக்கம் 105, 150 185, 206,
13, 14, 15 217, 227.

சிறுகதை

5 அறிவாசிரியன் ... 67
7 கல்வி யில்லாக் குறை ... 111
8 குறையில்லாக் கல்வி ... 127
10 செல்வமில்லாக் குறை ... 158
11 தன்னையே நயந்த காதல் ... 174
12 சொப்பனத்தி லன்றோ சுகம் ... 189
22, 23, 24. எதுவேண்டும் 347, 357, 371

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

16,17 மனுஷத்வம். 253,267
18, 19,20. ராஜாராம் மோஹன்ராய் 277,298, 307.
22, 25. இயற்கைத் தருமம் ... 345, 389.

பிறவிடயங்கள்

1, 6, 15,16, தமிழ்வேதக்கடலமுதம் 10, 86, 234, 247,
1 இன்பமும் துன்பமும் ... 13
2, 3. உபநிடத முனிவன் 27, 41
8 தருமமேன் சாலுந்தமிழ் ... 124
12 நல்லவள் நீயே நங்காய் ... 190
14 மனித வாழ்க்கை ... 222
25 வஞ்சினமொழிகள் ... 391

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட. ச்யாவனப்ராசா　ம.ட.மிருங்காமலக.தைலம்　கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட் டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

கலா நிலயத்

தமிழ் வகுப்புக்கள்

கீழ்க்கண்ட இடங்களில் இப்பொழுது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

உடனே, அவைகளில் சேர்ந்துகொள்ளும்படி அனைவரும் வேண்டப்படுகின்றனர்.

1. சென்னை, எஸ்பிளனேட் Y. M. C. A. கட்டிடத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் மாலை 5-30 முதல் 6-45 வரையில்.
2. பெரம்பூர் கலவல கண்ணன்செட்டியார் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் திங்கள் வியாழக் கிழமைகளில், மாலை 6-30 முதல் 7-15 வரையில்.
3. சைதாப்பேட்டை, சேஷாசல முதலி தெரு, வித்யாசாகரப் பள்ளிக்கூடத்தில் புதன் சனிக் கிழமைகளில் மாலை, 7 முதல் 7-45 வரையில்.

ஆங்காங்குள்ளவர்களுக்கு இவ்விடயத்தை நம் கலாநிலய வாசகர்கள் தெரிவித்து அவர்களை இவ் வகுப்புக்களிலொன்றில் சேரும்படி செய்வார்களென்று நம்புகின்றோம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஞூ ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன
பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கேடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

DESAI & Co., 17, Cross Road, Malleswaram, BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1 இனும்!

இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனுமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor).